பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 14 சனிக்கிழமை (30.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :246

★ நாட்டின் உள்விவகாரங்களில் அத்துமீறிய தலையீடு
★ இணைத் தலைமைகளின் குற்றச்சாட்டும் தவறானது

# உ விடயங்களில் அரசின் அதிருப்தி
# நோர்வேக்குத் தெரிவிக்கப்படும்!

## வியாழனன்று விடர் ஹெல்கிஸன் இலங்கைக்கு வருகின்ற சமயத்தில்

கொழும்பு, ஜூலை 30

**இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வே தொடர்பாக இரண்டு விடயங்களில் இலங்கை அரசுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.**

**அடுத்த வாரம் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இலங்கைக்கு வரும்போது இலங்கை அரசின் அதிருப்தியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே நேரடியாக அவரிடம் தெரிவிப்பார் என அறியவருகின்றது.**

விடர் ஹெல்கிஸன் நான்கு நாள் சுற்றுப் பயணமாக எதிர்வரும் வியாழனன்று கொழும்பு வருகின்றார்.

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் அவர், கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் வழமை போலச் சந்திப்பார் எனத் தெரிகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியின் யாப்பை மாற்றுவது பற்றி ஜனாதிபதி திடீரென ஆராய்கிறார்

கொழும்பு, ஜூலை30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, திடீர் நடவடிக்கையாக கட்சியின் யாப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்துவருகிறார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாப்பைத் திருத்துவது பற்றி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் மந்திராலோசனை நடத்தியிருக்கும் ஜனாதிபதி, இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணித்திருக்கிறாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் யாப்பினைத் திருத்தி கட்சியின் தலைவராகத் தாம் தொடர்ந்தும் பதவிவகிப்பதற்காகவே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுக்கிறார் எனவும் கட்சியின் தலைமைப் பதவியை நிரந்தரமாக அவரிடம் வழங்குவதற்கு சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி சேவை தென்னாசிய நாடுகளுக்கும் விஸ்தரிப்பு

### இலங்கை, இந்திய மக்களும் பார்வையிடுவதற்கு வசதி

யாழ்ப்பாணம், ஜூலை30

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிச் சேவை (என்.ரி.ரி.) தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளை தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் வசிப்போரும் பார்ப்பதற்கு வசதியாக இந்த விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான், குர்கிஸ்தான், சீனா, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், பர்மா ஆகிய நாடுகளில் இந்தத் தொலைக்காட்சி ஒளி

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புச் சர்ச்சை; அரசுத்தரப்பில் நேற்று பதில்மனு

கொழும்பு, ஜூலை30

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பானது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது என்பதால், அதற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நிராகரிக்கவேண்டுமென்று கோரி அரசு சார்பில் நேற்று உயர்நீதிமன்றத்தில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கின் மூன்றாம் பிரதிவாதியான புனர்வாழ்வு, புனரமைப்பு, தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்கவின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் இந்தப் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி ஜே.ஸி. வெலியமுன இந்த மனுவைத் தாக்கல்செய்தார். இந்தப் பதில் மனுவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொலை

அச்சுவேலி, ஜூலை30

அச்சுவேலி மேற்கில் நேற்று ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அந்த இடத்தைச்சேர்ந்த பிலிப்பையா பேர்ணாட் ஜெயராசா (வயது-56) என்பவரே இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

இவர் தனது கரட்தோட்டத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே,

(18ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் தற்போது தொடர்ந்துவரும்

## நெருக்கடி நிலையை தீர்ப்பது பற்றி நோர்வேத் தலைநகரில் நேற்றுப் பேச்சு

கொழும்பு, ஜூலை30

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்திற்கான பயணப் பாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் என்பன குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நோர்வே அனுசரணையாளர்களுடன் ஒஸ்லோவில் முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

நேற்று இந்தப் பேச்சு இடம்பெற்றிருக்கி

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்க உத்தரவிடக்கோரி மனு

### மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியைப் பிரகடனப்படுத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடவேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுக் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி தர்மதாஸ கோமஸ் என்பவர் இதனைக் கோரியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்பதைத் தெரிந்து கொள்வது மக்களின் உரிமை என்பதால் அதனை எப்போது என்று அறிவிக்கவேண்டும் என்று முன்னதாக, கடந்த வருடம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேற்படி சட்டத்தரணி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இதில் சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலும் தேர்தல் தொடர்பில் பலவித கருத்துகள் நிலவுவதாலும் அதற்கு முடிவுகட்டும் வகையில் தேர்தல் திகதியைப் பிரகடனப்படுத்துவதற்கான உத்தரவைத் தேர்தல் ஆணையாளருக்குப் பிறப்பிக்கவேண்டும் என நேற்று அவர் நீதிமன்றில் தாக்கல் செய்த புதிய மனு ஒன்றினூடாக மேன்முறையீட்டு நீதிமன்றைக் கோரியுள்ளார். (எ-க)

## ஒரே சூலில் மூன்று குழந்தைகள் யாழ். ஆஸ்பத்திரியில் பிரசவம்

வலி.கிழக்கு, ஜூலை30

நல்லூர், கல்வியங்காடுப் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியில் வசிக்கும் திருமதி நாகேந்திரா சுதர்சினி (வயது-23) என்பவரே ஒரே சூலில் இரண்டு பெண் குழந்தைகளையும், ஆண்குழந்தை ஒன்றையும் பிரசவித்திருக்கின்றார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் பிறந்த குழந்தைகள் மூவரும் நலமாகவுள்ளனர் என யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுமாலை தெரிவித்தன. (எ-180-ரி)

## கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் ஈ.பி.டி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை30

தினமுரசுப் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த சமயம் நேற்றுமுன்தினம் யாழ். நகரப்பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட கட்சி உறுப்பினர் சு.நிக்ஷனின் கொலையைக் கண்டித்து கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக ஈ.பி.டி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று நண்பகலளவில் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாக ஒன்றுகூடிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அவர்களது உறவினர்களும் உயிரிழந்தவரின் சடலத்தை வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அனைவரும் வாய்களைக் கறுப்புத்துணியால் மூடிக்கட்டியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களது உறவினர்கள் கைகளில் கறுப்புக் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

கொலையைக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் இவர்கள் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பியின்

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



தொலைக்காட்சி சேவை விஸ்தரிப்புத் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பின்போது பணிப்பாளர் சி.கருணாகரன் (நடுவில்) விளக்கமளிப்பதையும், விடுதலைப் புலிகளின் ஊடகத்துறைப் பொறுப்பாளர் நரேஷ் மாஸ்ரர் (இடது), தமிழீழத் தொலைக்காட்சி சேவையைச் சேர்ந்த கு.வீரா ஆகியோர் அருகில் இருப்பதையும் படங்களில் காணலாம்.

# காரைநகரில் நாளை கலை, இலக்கியப் பெருவிழா

காரைநகர்,ஜூலை30

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு கலாசார சபை நடத்தும் வருடாந்த தேசிய கலை இலக்கியப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசார சபையின் தலைவரும், உதவி அரச அதிபருமான க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். மாவட்டச் செயலக பிரதித் திட்டப் பணிப்பாளரும், முன்னாள் காரைநகர் உதவி அரச அதிபருமான வே.சாம்பசிவம் பிரதம விருந்தினராகவும் -

சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன், காரைநகர்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.கானகன் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், காரைநகர் தியாகராஜா ம.ம.வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கலாபூஷணம் செ.மெற்றாஸ்மெயில், காரைநகர் ப.நோ.கூ சங்கத் தலைவர் சு.சிவஞானம், காரை அபிவிருத்திசபைச் செயலாளர் ஜெ. தில்லையம்பலவாணர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவின் சிறப்பு நிகழ்வாக பண்பாட்டுப் பேரணி, நூல் கண்காட்சி, பனம்பொருள் உற்பத்திக் கண்காட்சி, பாரம்பரியப் பொருள் கண்காட்சி மற்றும் கலை இலக்கியப் போட்டிப் பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்பு என்பனவும், கலைமன்றங்கள், பாடசாலைகள் பங்குகொள்ளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அன்றையதினம் காலை 8 மணிக்கு காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து அங்கிருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகும். காரைநகர், தனியான நிர்வாக அலகாக பிர கடனம் செய்யப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது கலை, இலக்கிய விழா இதுவாகும். (எ-73)

# வடமராட்சிக் கரையோரப் பகுதி வர்த்தகர்கள் தமக்கும் நிவாரணம் கேட்டு நேற்றுப் பேரணி

வடமராட்சி,ஜூலை30

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட - பொலிகண்டி தொடக்கம் வியாபாரிமூலை வரையிலான - பிரதேசங்களைச் சேர்ந்த 75 கரையோர வர்த்தகர்கள் தமக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படாததைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பொலிகண்டியிலிருந்து ஆரம்பமான இப்பேரணி சக்கோட்டை, இன்பருட்டி, சுப்பர்மடம் வழியாகப் பருத்தித்துறை நகரை வந்தடைந்தது.

பேரணியில் வந்தோர், 'நாமும் தமிழர்கள்தான் எங்களை ஏன் புறக்கணிக்கிறீர்கள்', 'எமக்கு நிவாரணங்கள் இல்லையா', 'அரச வங்கிகள் எங்களை நிர்க்கதியாக்கியுள்ளன' போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளைச் சுமந்துவந்தனர்.

பேரணியாக வந்த வர்த்தகர்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகம், பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண அலுவலகம், அதே வீதியில் உள்ள வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகியவற்றில் மகஜர்களைக் கையளித்துவிட்டுக் கலைந்து சென்றனர். (ஐ-173)

## ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிப்பதில்

# தேர்தல் ஆணையாளர் தன்னிச்சையாக நடந்தால் நியாயம் கேட்டு நீதிமன்றம் செல்லுமாம் அரசு!

கொழும்பு,ஜூலை30

நாட்டின் அரசமைப்புக்கமைய ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்படவேண்டும் என்பதைத் தேர்தல் ஆணையாளர் விரைவில் சுயாதீனமாக அறிவிக்கவேண்டும். அதை விடுத்து யாருடையதாவது அழுத்தங்களுக்கு அடிபணிந்து தன்னிச்சையாக அவர் நடந்து கொள்வாரேயானால், நாம் உயர்நீதிமன்றத்திற்குச் செல்வதைத்தவிர வேறு வழியில்லை. - என உறுதியாகக் கூறுகின்றார் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார நலனோம்புகை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் இப்படிக் கூறினார்.

2006ஆம் ஆண்டில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று கூறிக்கொண்டே அவசர அவசரமாகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை சுதந்திரக் கட்சி உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளதே! அப்படியானால், இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா? - என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர்.

எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. தேர்தல் திகதியை அறிவிக்க வேண்டியது தேர்தல் ஆணையாளரின் கடமை. அவர் அரசமைப்புக்கு உட்பட்ட வகையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கவேண்டும். நாட்டின் அரசமைப்பு மீறப்பட்டால், அதனை எதிர்த்து சவால் விடவும், நீதிமன்றம் செல்லவும் எவருக்கும் உரிமையுண்டு. அதை எவராலும் தடுக்க முடியாது - என்று அமைச்சர் பதிலளித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெற்ற பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானவர்களின் அதிக நம்பிக்கைக்கும் செல்வாக்குக்கும் உரிய ஒருவரே நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் பிரதமராகவும் தெரிவுசெய்யப்படுவது வழமை. ஆனால், ஜனாதிபதி வேட்பாளரையும், பிரதமர் ஆகப் போகின்றவரையும் ஒரே நேரத்தில் சுதந்திரக் கட்சி அறிவித்திருப்பது ஏன்? - என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

உங்களுடைய சந்தேகம் நியாயமானதுதான். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி இப்போதே உறுதியாகிவிட்டது. இதனால், வெற்றிடமாகும் பிரதமர் பதவிக்குப் புதிதாக ஒருவரை நியமிக்கவேண்டும் அல்லவா? - என்று பதிலுக்குக் கேட்டார் அமைச்சர்.

ஸ்ரீல.சு.கட்சியில் எத்தனையோ மூத்த உறுப்பினர்கள் இருக்கும்போது அநுரா பண்டாரநாயக்காவைப் பிரதமர் பதவிக்குச் சிபார்சு செய்ததுசிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றதே? - என செய்தியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தவறா? அநுரா பண்டாரநாயக்க நம்பிக்கையானவர் இல்லையா? அவர் சகல தரப்பினரின் நம்பிக்கையையும் செல்வாக்கையும் பெற்றவர். கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது, அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் பிரசாரப்படுத்துவதில் எந்த உண்மையும் இல்லை. கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாகவே இத் தெரிவுகளை மேற்கொண்டனர். அதிருப்தி என்ற பேச்சுக்கே இடமில்லை - என அடித்துக் கூறினார் அமைச்சர். (எ-க)

# மேல் தளத்துக்கு கொண்டுசெல்கையில் மயக்கமுற்ற நோயாளி வீழ்ந்து மரணம்!

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் அவரை வைத்தியப் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரியின் கீழ்தளத்தில் இருந்து மேல் தளத்திற்கு எடுத்துச்சென்ற சமயம் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார்.

நோயாளரைக் காவிச் செல்லும் ஸ்ரெச்சர் வண்டில் ஒன்றின் உதவியுடன் இவரை மேல்தளத்துக்குக் கொண்டு சென்றவேளை, திடீரென அவர் சுயநினைவை இழந்து கீழே வீழ்ந்தார் என்றும் - பின்னர் அவர் உயிரிழந்தார் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பான முறைப்பாடு ஒன்றை ஆஸ்பத்திரி நிர்வாகம் யாழ். பொலீஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்புப் பிரிவிலும் பதிவுசெய்துள்ளது.

உயிரிழந்த இளைஞன் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தங்கவேல் இசைமுடி (வயது 18) என்பவராவார். இனங்காணப்படாத நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவர், முதலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்றுமுன்தினம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# சிங்களத் திரைப்பட இயக்குநரின் இன ஒற்றுமை உணர்வு வெளிப்பாடு

கொழும்பு,ஜூலை30

தமிழர்களாகப் பிறந்த காரணத்துக்காக 1983ஜூலை கலவரத்தின்போது சாத்வீகவாதியான டாக்டர் ராஜசுந்தரம் உட்படப் பல கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 22ஆம் ஆண்டு நினைவுநாளன்று 'ஜனாதிபதி சினிமா விருது வழங்கும் விழா' ஒழுங்கு செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அவ்விழாவில் பரிசு வழங்கிக் கௌரவிக்க அழைக்கப்பட்டிருந்த பிரபல சிங்களத் திரைப்பட இயக்குநரொருவர் ஜனாதிபதியின் கையால் தாம் நேரில் அப்பரிசினைப் பெறுவதைத் தவிர்த்துக்கொண் டார்.

2005ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி திரைப்படவிருது வழங்கும் வைபவம் கடந்த 27ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நடத்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சர்வதேச தரத்தில் ஐந்து விருதுகளைப் பெற்றுக்கொண்ட (மே மகே சந்தய்) 'இது எனது சந்திரன்' என்ற திரைப்படமும் விசேட விருதுக்காகத் தெரிவுசெய்யப்பட்டு, அதன் இயக்குநர் அசோகா ஹந்தகம விசேட விருதான ஒன்றரை இலட்சம் ரூபா பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படவிருந்தார்.

தாம் நேரில் சமுகமளித்துப் பரிசினைப் பெற்றுக்கொள்வதைத் தவிர்ப்பதற்கான மேற்கூறிய காரணத்தை விவரித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவர் அனுப்பிவைத்த கடிதத்தில் 1981 ஆம் ஆண்டில் சிங்கள இனவாதிகளால் எரியூட்டி அழிக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்தின் புனரமைப்புக்காகத் தனக்குரிய பரிசுத் தொகையான ஒன்றரை இலட்ச ரூபாவையும் தாம் அன்பளிப்புச் செய்வதாகவும், பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை நிறைவேற்றிய ஜனாதிபதியின் துணிச்சலைப் பாராட்டுவதாகவும் அசோகா ஹந்தகம தெரிவித்திருந்தார்.

இனங்களுக்கிடையேயான நல்லுறவைப் பேணவும், நல்லெண்ணத்தை வளர்க்கவுமான இந்த இயக்குநரின் முன்மாதிரி உணர்வை வெளிப்படுத்தும் செயற்பாடு, அவரது கடிதம் விழா மேடையில் வாசிக்கப்பட்ட சமயம் ஜனாதிபதி சந்திரிகா உட்பட ஏனைய சபையோரின் பாராட்டைப்பெற்றது. (ஐ-205)





யாழ். நகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரின் கொலையைக் கண்டித்து நல்லூரில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தின் முன்பாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாகப் பிரேதப்பெட்டி வைக்கப்பட்டிருப்பதையும், கறுப்புத்துணியால் வாயைக் கட்டியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பிரபா)

# இந்திய ரயிலில் குண்டுவெடிப்பு
# 10 பேர் மரணம்; 50 பேர் காயம்

புதுடில்லி,ஜூலை30

இந்தியாவின் பாட்னாவிலிருந்து டில்லி நோக்கிச் சென்றுகொண்டிருந்த சரம்ஜீவி எக்ஸ்பிரஸ் ரயிலில் குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு பெண் உட்பட 10 பேர் இறந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. காயமடைந்தவர்களில் 20 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இதேவேளை, மற்றொரு ரயிலில் 22 குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாட்னா - டில்லி ரயில், உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஜான்பூர் - கல்தான்பூர் நிலையங்களுக்கு இடையே ஹர்பால் கஞ்ச் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.15 மணியளவில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்றது.

முன்பதிவு செய்யாத பயணிகளுக்கான பெட்டியில் கழிவறைக்கு அருகே வெடிப்பு நடைபெற்றுள்ளது. இதன் அதிர்வுகள் அடுத்த 3 பெட்டிகளிலும் உணரப்பட்டுள்ளது.

எனினும், வெடித்தது குண்டுதானா என்பது தெளிவாகத் தெரியவில்லை என ரயில்வே வாரியத் தலைவர் ஆர்.கே.சிங் தெரிவித்தார். பொலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவத்தையடுத்து லக்னௌ, முகல் சராய் பகுதியிலிருந்து மருத்துவக் குழுக்கள், சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளன. மூத்த அதிகாரிகளும் விரைந்துள்ளனர் என வடக்கு ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த பயணிகள் பட்லாபூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுவெடிப்பு இடத்துக்கு விரைந்த ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை விரைவாக ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூபா ஒரு லட்சமும் படுகாயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ரூபா 50 ஆயிரமும் இழப்பீடு வழங்கப்படும் என உத்தரப் பிரதேச முதல்வர் முலாம் சிங் யாதவ் தெரிவித்துள்ளார்.

தன்பாத் - கயை ரயிலில் 22 நாட்டு வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டனர் என அமைச்சர் லல்லு பிரசாத் தெரிவித்தார். (க-3)

## யேமன் மதகுருவுக்கு 75 வருட சிறைத்தண்டனை

அல் - ஹெய்டா மற்றும் ஹமாஸ் ஆகிய தீவிரவாத அமைப்புகளுக்கு சட்டவிரோதமான முறையில் நிதியுதவி வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட யேமன் மதகுரு ஒருவருக்கு அமெரிக்கா 75 வருட சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

ஷீக் மொஹமட் அலி ஹசன் அல் - மொயாட் இணையத்தளத்தினூடாக குறிப்பிட்ட இரு தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கினார் என்று கூறியே அமெரிக்க நீதிமன்றம் இந்தச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

ஜேர்மனி புலனாய்வுத்துறையைச் சார்ந்த இருவர் மதகுருவைச் சந்தித்துப் பேசியபோது சுமார் 2 கோடி அமெரிக்க டொலர்களை பலஸ்தீன தீவிரவாத அமைப்பான ஹமாஸுக்கு தான் வழங்கியதை ஒப்புக்கொண்டார்.

இந்த மதகுரு கடந்த 2003 ஆம் ஆண்டு ஜேர்மனி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் அமெரிக்க அரசிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து ஒரு கோடியே 25 லட்சம் அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## பூட்டிய வீட்டுக்குள் 15 ஆண்டுகள் தாயுடன் வாழ்ந்த சீனச் சிறுமி

பெய்ஜிங்,ஜூலை30

மனநிலை பாதிக்கப்பட்ட தாயால் 15 ஆண்டுகள் பூட்டிய வீட்டுக்குள் வளர்க்கப்பட்ட சீன சிறுமியை பொலீஸார் மீட்டுள்ளனர். 15 வயதான அந்தச் சிறுமியின் உடல்நிலை சிகிச்சையின் பின்னர் முன்னேற்றம் கண்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட அந்தச் சிறுமியின் பெயர் ஜியாங் வீ (16). இவரது தாயாரை, தந்தை விவாகரத்துச் செய்துவிட்டார். இதனால் மனநிலை பாதிக்கப்பட்ட தாய் தன் ஒரே மகளுடன் பூட்டிய வீட்டுக்குள் இருந்து கொண்டார். தன்னை யாராவது கொலை செய்துவிட்டு குழந்தையை பறித்துச் சென்று விடுவார்கள் என்ற பயம் தான் இதற்குக் காரணம்.

பதினைந்து ஆண்டுகளாக சூரிய வெளிச்சத்தைக் கூடப் பார்க்காமல் இருட்டறைக்குள் தனது மகளை அந்தத்தாய் பதுக்கி வைத்திருந்த செய்தி வெளியானதும் பொலீஸாரும், உறவினரும் அவர்களை இந்த மாத ஆரம்பத்தில் மீட்டனர். ஜியாங் வீயும் அவரது தாயாரும் உடனடியாக வடகிழக்கு சீனாவில், ஹெலிலாங் ஜியாங் மாகாணத்திலுள்ள ஹார்பின் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். ஜியாங் மீது சூரிய ஒளிபடாததாலும், ஊட்டச்சத்து குறைபாட்டாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை டாக்டர்கள் கண்டுபிடித்தனர். அதற்குத் தற்போது தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிறுமியின் தாயாரின் உடல்நிலையும் மனநிலையும் மோசமாகத்தான் உள்ளது. அவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஜியாங் பேசுவது குழந்தைத்தனமாக இருக்கிறது. கேள்விகளுக்கு மெதுவாகவும், தாமதித்தும் பதில் சொல்கிறார். மற்றவர்களுடன் பேச அவர் ஆர்வம் காட்டுகிறார். அது அவர் மனநோயிலிருந்து விடுபட உதவும்.

15 ஆண்டுகளாக மனநிலை பாதித்த அன்னையின் அரவணைப்பில் இருந்ததால் அவருக்கு அதேமாதிரியான பாதிப்பு இருக்கிறது. வீட்டுச்சிறையில் இருந்தபோது ஜியாங்கிற்கு பேச்சுத் துணையாக ஒரு பழைய ரேடியோ இருந்திருக்கிறது. அதை அவர் கேட்டுக் கொண்டிருந்ததால் அவர் ஊமையாவதில் இருந்து தப்பித்தார் என்று சிறுமியின் நிலைமை குறித்து டாக்டர் ஷாங் காங்பே கூறினார். (க-3)

## நிரந்தர உறுப்புரிமை தராவிடின் நிதியுதவி குறைக்கப்படும்

### ஐ.நாவுக்கு ஜப்பான் எச்சரிக்கை

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவியை எங்களுக்கு தராவிட்டால் ஐ.நாவுக்கான நிதியுதவி குறைந்துவிடும் ஆபத்து ஏற்படும் என்று ஜப்பான் எச்சரித்துள்ளது.

செய்தியாளர் மாநாடு ஒன்றின்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் நொபுடாகா மச்சிமூரா கலந்துகொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா.சபையின் செலவுக்காக அமெரிக்கா 22 வீதத்தையும், ஜப்பான் 19 வீதத்தையும் வழங்கிவருகிறது.

ஜப்பானின் நிலைகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

எங்களுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்காவிட்டால், ஐ.நாவுக்கு கொடுக்கப்படும் நிதியைக் குறைக்கும்படி ஜப்பானிய மக்கள் வலியுறுத்தும் அபாயம் ஏற்படும்.

தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் தோல்வி ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. தோல்வி ஏற்பட்டால் என்ன செய்வது என்பதை நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை.

தோல்வி ஏற்பட்டால், ஐ.நாவுக்கு நிதியுதவி செய்வதற்கு எதிர்ப்பு கிளம்பும். ஜப்பானிய மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் உதவியை குறைக்கும் நிலை ஏற்படும் - ஆபத்து உருவாகும்.

## 30 வருட ஆயுதப் போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தது ஐ.ஆர்.ஏ.

வட அயர்லாந்தில் சகலவிதமான ஆயுத நடவடிக்கைகளையும் கைவிடுவதாக அயர்லாந்து குடியரசு இராணுவம் அறிவித்துள்ளது.

பிரிட்டன் ஆட்சிக்கு எதிராக வட அயர்லாந்தில் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வ்ந்த ஆயுதப் போராட்டம் கைவிடப்பட்டது என அயர்லாந்து குடியரசு இராணுவம் நேற்றுமுன்தினம் சம்பிரதாய பூர்வமாக அறிவித்தது.

அனைத்து உறுப்பினர்களும் தமது ஆயுதங்களைக்களையவேண்டும் என்று உத்தரவிட்டுள்ள அந்த அமைப்பு இனிமேல் அரசியலில் ஈடுபட விரும்புவதாக அறிவித்துள்ளது.

வட அயர்லாந்து அரசியலில் இந்த முடிவு ஒரு திருப்புமுனையாக அமையுமென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் அயர்லாந்து ஆதரவுப் போராளிகள் தமது வார்த்தைகளை செயலுருவில் வெளிப்படுத்தவேண்டும் என்றும்-

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் முறிவடைந்ததை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வட அயர்லாந்தில் அரசொன்றை நிறுவுவதற்கு பல மாதங்கள் எடுக்கக்கூடும் என்று எதிர்த்தரப்பினர் கூறியுள்ளனர்.

அயர்லாந்து குடியரசு இராணுவத்தின் இந்த முடிவினை பிரிட்டன் பிரதமர் வரவேற்றுள்ளார். (க-3)

## சோதனைக் குழாய் மூலம் சுறாமீன்கள்; ஆஸி. விஞ்ஞானிகள் புதிய முயற்சி

சோதனைக் குழாய் மூலம் செயற்கையாகக் கருத்தரிக்க வைத்து குழந்தை பிறக்கவைப்பது போல் சுறாமீன்களை உருவாக்கவும் ஆஸி. விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாக் கடற்பகுதியில் அபூர்வ இன சுறாமீன்கள் அழியும் நிலையில் உள்ளன. இதேநிலை நீடித்தால் இன்னும் 20 ஆண்டுகளில் இந்தச் சுறாமீன் இனம் முற்றிலுமாக அழிந்துவிடும் அபாயம் உள்ளது.

இந்தச் சுறாமீன்களின் வயிற்றில் 2 கர்ப்பப்பைகள் உள்ளன. இதில் ஒரு கர்ப்பப்பையில் உள்ள குட்டி மீன்களை வெளியேதள்ளி அவற்றை பெரிய மீன்கள் தின்றுவிடுவதும், சுறாமீன்கள் வேட்டையாடப்படுவதும் இந்த வகை மீன் அழிந்து வருவதற்கு முக்கிய காரணங்கள்.

எனவே, ஆண் சுறாமீனின் அணுக்களையும், பெண் சுறாமீனின் சினை முட்டைகளையும் தனித்தனியே எடுத்து சோதனைக் குழாயில் இணையவைத்து அதை இன்னொரு கர்ப்பப்பையில் செலுத்தி சுறாமீனாக வளரச் செய்கிறார்கள். முதல்முறையாக 8.5 அடி நீள பெண் சுறாமீனில் இந்தச் சோதனையைத் தொடங்கியுள்ளனர். இன்னும் ஒரு சில மாதங்களில் சோதனைக்குழாய் சுறாமீன் உருவாகிவிடும் - என விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

சோதனைக்குழாய் மூலம் செயற்கைக் கருத்தரிப்புச் செய்து குழந்தை பிறக்கவைக்கும் சாதனையை 27 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து டாக்டர்கள் ஏற்படுத்தினார்கள்.

இதையடுத்து, சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆணின் விந்தையும், பெண்ணின் சினை முட்டையையும் தனித்தனியே வெளியேஎடுத்து அதை சோதனைக்குழாயில் இணையவைத்தனர். கரு வளரத்தொடங்கியதும் அதைப் பெண்ணின் கர்ப்பப்பைக்குள் செலுத்தி வளரவிட்டு குழந்தை பிறக்க வைத்தனர். (க-3)

## பொலீஸாரின் தடியடியில் பல மாணவர்கள் காயம்

### நேபாளத்தில் சம்பவம்

நேபாளத்தில் பொலீஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடந்த மோதலில் பொலீஸார் நடத்திய தடியடியில் மாணவர்கள் பலர் படுகாயமடைந்தனர்.

நேபாளத்தில் மாணவர் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் ககன்குமார், டூபா பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். அதைக் கண்டித்து மாணவர்கள் நேற்றுமுன்தினம் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலை, கல்லூரி வளாகத்தில் திரண்டு ரயர்களை எரித்தனர்.

வளாகத்துக்கு வெளியே நின்ற பொலீஸார் மீது கல் வீசித் தாக்கினார்கள். பொறுத்துப்பார்த்த பொலீஸார் கல் வீச்சு எல்லை மீறவே வளாகத்திற்குள் புகுந்து மாணவர்கள் மீது தடியடி நடத்தினார்கள்.






## கடற்கரையில் குடித்து கும்மாளமிட்ட திரிஷாவை அப்புறப்படுத்தியதாம் பொலீஸ்

சென்னை, ஜூலை 30

சென்னையை அடுத்துள்ள ஈச்சம்பாக்கம் கடற்கரைப்பகுதியில் நண்பர்களுடன் குடித்து கும்மாளமிட்டுக்கொண்டிருந்த பிரபல தமிழ்த் திரைப்பட நடிகை திரிஷாவை பொலீஸார் அப்புறப்படுத்தினர் என்று வெளியான செய்தி தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செய்தியால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட திரிஷா, தான் அவ்வாறான செயலில் ஈடுபடவில்லை; அந்தச் செய்தி முற்றிலும் தவறானது என மறுத்துள்ளார்.

இந்தச் செய்தி குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஒரு தெலுங்கு படப்பிடிப்புக்காக ஐதராபாத் போயிருந்தேன். படப்பிடிப்புக்குப் பிறகு எனக்கு ஒருநாள் ஓய்வு கிடைத்தது. நான் சென்னை வந்தால், எனது தோழிகளைச் சந்திப்பதுவழக்கம். அன்று நான் வழக்கம் போல் என் தோழிகளைச் சந்தித்தேன். கிழக்கு கடற்கரைச்சாலையின் அருகிலுள்ள என் தோழியின் வீட்டுக்கு நான் சென்றபோது என் காரை வீதியோரத்தில் நிறுத்தி வைத்திருந்தேன்.

சிறிது நேரத்தில் அவ்விடத்துக்கு வந்த இரவுநேர ரோந்துப் பொலீஸார் ஒருவர் கார் நிற்பதைப் பார்த்துவிட்டு விசாரித்தார். சாரதி அனுமதிப்பத்திரம் காண்பிக்கும்படி கேட்டார். நான் அனுமதிப்பத்திரத்தைக் காட்டியதும் என்னை அந்தப் பொலீஸ்காரர் அடையாளம் கண்டுகொண்டார்.

பிறகு இது மோசமான பகுதி. இங்கே பல கொலைகள் நடந்துள்ளன. உடனே போய்விடுங்கள். நீங்கள் ஓய்வு எடுப்பதாக இருந்தால் சொல்லுங்கள் பாதுகாப்புக்கு ஈச்சம் பாக்கத்திலிருந்து பொலீஸ்காரர்களை அனுப்பிவைக்கிறேன் - என்று கூறினார். வேண்டாம் என்றதும் போய்விட்டார்.

ஆனால், சில பத்திரிகைகளில் நான் பாதையில் காரை நிறுத்திவிட்டு நடனம் ஆடியதாகவும், கும்மாளம் போட்டதாகவும், நண்பர்களுடன் இருந்ததாகவும், தங்கள் கற்பனைக்கு ஏற்றபடி இட்டுக்கட்டி பிரசுரம் செய்திருக்கிறார்கள். சம்பவத்தின்போது நானும் என் தோழிகளும் மட்டுமே இருந்தோம். வேறு எந்த நண்பர்களும் இல்லை. நடனம் ஆடவும் இல்லை - என்று அவர் கூறினார். (க-3)

## கல்விச் சமூகத்தினருக்கான கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரதேச தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், ஆசிரியர்கள், நிர்வாக உதவியாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி அரசியல் துறை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. கலந்துரையாடலில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் கேட்டுள்ளார். (3-7-203)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதி நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவரும் செயற்குழு உறுப்பினரும் பொதுச் சுகாதாரப் பொறியியற் பிரிவு உத்தியோகத்தருமாகிய

உயர்திரு.குமாரசாமி கதிர்காமநாதன்

அவர்கள்

கடந்த 07-07-2005 அன்று யாழ். நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
யா.மா.ச. சுகாதாரப் பகுதி, ஊழியர் நலன்புரிச்சங்கம். செயற்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள்.

(38335) (24-14-15)

உ
சிவமயம்

## இந்தியப் பரம்பரை ஜோதிடர்





அருள்வாக்கு

### அம்பிகா அம்மா அவர்கள்

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்

* ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
* திருமணப் பொருத்தம் பார்க்கப்படும்

அம்மாவைச் சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ முருகன் ஜுவலர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்.

(38167)(42-14-15-24)

கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மயிலின் தயாரிப்பில் உருவான
இளம் இசை நாடகக் கலைஞர்கள் பங்கேற்கும்

## பவளக்கொடி

(இசைநாடகம்)

காலம்: நாளை (31-07-2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி
இடம்: இளங்கலைஞர் மன்றக் கலையரங்கு சட்டநாதர் வீதி, நல்லூர்
குறிப்பு: மேற்படி நாடகம் இளங்கலைஞர் மன்ற மாதாந்த கலைநிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறுகிறது.

(38340) (24-14-15)

சிறப்புற வாழ்த்துவோர்:
நிபுந சயன்ஸ் ஹோல் நிறுவனத்தினர் - யாழ்ப்பாணம்.

நாடகத்துறை சார்ந்தோருக்கும் ஆர்வலர்களுக்கும்
ஓர் அரிய வாய்ப்பு!

### அரங்கச் செயலாளிகளை உருவாக்கும் திட்டம்

சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் அரங்கு இன்று முக்கியமானதொரு பங்கை வகிக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கான ஆளணி தேவைப்படுகிறது.

இதனை உருவாக்குவதற்கான பயிற்சிகளை எமது நிறுவனம் ஆரம்பித்திருக்கிறது. நீங்களும் இப்பயிற்சியில் இணைந்து சமூக அபிவிருத்திக்கான தொழில்சார் அரங்கச் செயலாளி ஆகுங்கள்.

### அபிவிருத்திக்கான அரங்கப் பயிற்சிநெறி
### Theatre For Development Training

பயிற்சியில் உள்ளடங்கியுள்ளவை

- நடிகருக்கான அடிப்படைத்திறன் விருத்தி
- நாடகத் தயாரிப்பு
- நாடகம் எழுதுதல்
- பிரச்சினைப் பகுப்பாய்வு
- தெருவெளி அரங்கு
- பெண்கள் அரங்கு
- சிறுவர் அரங்கு
- அரசியல் நடவடிக்கைகளில் அரங்கு
- மனித உரிமைகளைப் பேணுதல்
- பெண்கள், சிறுவர் உரிமைகள் பேணுதல்
- அரங்கச் செயற்திட்டங்களை ஆவணப்படுத்தல்
- சமூக ஆற்றுப்படுத்தல், அணிதிரட்டல்
- தலைமைத்துவம் மற்றும் குழுச் செயற்பாடு
- திட்டமிடல், திட்டஉருவாக்கம், முகாமைத்துவம்
- உள்ச்சமூக மேம்பாட்டுக்கான அரங்கு

(அ/44119) (24-14-15)

வேண்டப்படும் தகுதிகள்:

G.C.E. உயர்தரம் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நாடக அரங்கத்துறையில் முன்னனுபவம்/ ஆர்வம். வயதெல்லை 18-45 பயிற்சிக்காலம் ஆறு மாதங்கள் (300 மணித்தியாலங்கள்) பயிற்சி ஆரம்பம்: 06.08.2005

நடைபெறும் பரீட்சையில் சித்தியடைவோருக்குப் பயிற்சி முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும். சிறப்பாகத் தேர்ச்சியடைவோர் மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்ப முடிவு திகதி 04.08.2005 விண்ணப்பங்கள் யாவும் A4 அளவு வெள்ளைத்தாளில் சுயவிவரங்கள் தெளிவாக எழுதப்பட்டு "மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர். செயல்திறன் அரங்க இயக்கம். அருளகம். ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி" என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

செயல்திறன் அரங்க இயக்கம் Active theatre movement

## CARITAS - HUDEC JAFFNA
## VACANCY



**1. Field Coordinator**
**Base Station:** Mulaitivu
**Main Duties:**
- Regular visits to monitor progress of programme activities and regular reporting back to Senior Project Manager
- Maintain regular contacts with local authorities (GA, AGA, GS) and community leaders
- Assist in preparing activity reports as required and purchasing procedure
- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Post based in Mulaitivu, with regular visits to Killinochchi and Jaffna.

**Requirements:**
- NCT in Civil Engineering or equivalent with 3 years experience in the same field
- Good analytical skill and field experience in Civil Site.
- Experience in Project Planning, Implementation, Monitoring and Evaluating. Excellent skill in monitoring implementation of program activities.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in WinWord, Excel and email software.
- Good knowledge of written and spoken English and able to prepare Monthly Progress Report.
- Good team player

**2. Field Officers**
**Base Station:** Mulaitivu (3 Positions)
**Main Duties :**
- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Assist in all programme implementation activities and inform the field coordinator of all the progress of the undertaken activities.
- Give regular information to the Field Coordinator or the Project Manager to whom he provides detailed and exhaustive news of the evolution of operations.
- Manage the skilled labour (masons, carpenters etc.)
- Fluency in Tamil & English

**Requirements:**
- NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field
- Experience in Implementation, Monitoring and Evaluating
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in WinWord, Excel and email software.
- Good team player

**3. Logistician / Store Keeper**
**Base Station:** Mulaitivu
**Main Duties :**
- Plan & Manage all activities related to procurement, transportation & storage of materials & equipment as necessary for program implementation.
- Assist the Purchasing Officer in preparing tender documents & receipt of quotation as necessary.
- Manage & maintain the warehouse according to professional standards & Hudec/Caritas guidelines
- Ensure purchase procedure are respected & all procedure regarding the warehouse

**Requirements:**
- Have excellent knowledge in Logistic field with 2 years experience
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in WinWord, Excel and email software.
- Planning and monitoring Logistics items
- Knowledge in the contract and supplying of stock

**4. Finance Officer**
**Base Station:** Mulaitivu
**Main Duties:**
- Set up and maintain efficient finance systems to support Program Activities (filling,..)
- Prepare the vouchers and check all bills and forward to the Budget Controller as per requirement
- Ensure cash book, bank book and petty cash book are maintained efficient and accurately in coordination with the Finance Controller
- Preparing and entering TALLY software ledger books.

**Requirements:**
- Accurate accounting skills & background (AAT / CIMA) with 2 years experience in other organization
- Knowledge in administrative Organization and finance management
- Computer skills
- Honesty & transparency
- Fluency in Tamil & English

**5. Livelihood Officer**
**Base Station:** Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)
**Main Duties:**
- Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
- Organize training & workshops to build & improve capacities of the above mentioned staff.
- Represent Caritas-Hudec on the issue of livelihood & income generating activities at district & divisional level coordination meetings with government, NGOs, UN organizations & the private sector
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus
- Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)

**Requirements:**
- Demonstrate management experience with a special emphasis on project management related to micro-enterprise and income generating activities.
- Experience using word processors, spread sheets & email.
- Knowledge & experience working with participatory
- Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector
- Fluency in Tamil & English
- Good communication skills

**6. Watchman**
**Base Station:** Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)
**Main Duties:**
- Watch the overall compound (main building, store, garages, drivers' room...) - make sure the main gate is open between 6h00 and 21 h30 - except special occasions.
- Receive any visitors and answer to their requests - the coming of any visitors should be announced to the office by phone.
- Check everything is in order in the compound after working day and report any mistake to the logistic officer to solve it if necessary.
- Maintain the compound clean. Cleaning will be done on a daily basis.

**Requirements:**
- 1 year experience in the same field
- Should be aware of any entrance of person in the compound.
- Minimum English skills
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus
- Strong interpersonal and liaison skills.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimam two references to the following address, latest by 15 August 2005

**Father Jeyakumar Caritas-Hudec Jaffna 14, Mathew's Road, Deogu Street, Jaffna.**
**Or e-mail: hudec@sltnet.lk**

**PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பேரினவாத சக்திகளின் ஆதரவில் தஞ்சம் புகுவாரா மஹிந்த ராஜபக்ஷ?

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் யார் என்பதை அக்கட்சி கடைசியாகத் தீர்மானித்துவிட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே கட்சியின் வேட்பாளர்.

இந்த முடிவு சில சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறது. அதேநேரம் புதிய சில சர்ச்சைகளுக்கும் வாசல் திறந்துவிடப்பட்டிருப்பதை நாம் அவதானிக்க வேண்டியவர்களாகி இருக்கிறோம்.

மேற்படி தீர்மானம் கட்சிக்குள் அதிகார ஒழுங்கு முறை பற்றிய இழுபறிக்கு முடிவு கண்டுவிட்டது என்பது வாஸ்தவம்தான்.

இதுவரை சுமார் பதினொரு ஆண்டுகாலம் நாட்டை ஆட்டிப்படைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குரிய காலத்தின் பின்னரும் தாம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதற்கான அரசியல் குளறுபடிகளைச் செய்யக்கூடும் என்ற சந்தேகம் இப்போதைக்கு அடிபட்டுப் போய்விட்டது என்பதும் உண்மைதான்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியிலா, அல்லது அடுத்த வருட இறுதியிலா? தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது? - என்ற கேள்விகளைத் தவிர, இது விடயத்தில் மற்றைய சர்ச்சைகள் எல்லாம் முடிந்துவிட்டன என்றுதான் பலரும் எண்ணுகிறார்கள்.

ஆனால், உண்மையில் இனிமேல்தான் முக்கிய சர்ச்சை ஒன்று உருவாகப் போகின்றது; கிளம்பப் போகிறது.

தென்னிலங்கையின் அரசியலில் இன முரண்பாட்டை உச்சம் பெறவைக்கும் நடவடிக்கையாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அமையப் போகின்றதா, இல்லையா என்பதுதான் அது.

பெரும்பாலும் அதைத் தீர்மானிக்கப் போகின்றவராக அமைய விருப்பவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான்.

அது எப்படி என்று பார்ப்பதற்குக் கடந்த ஆண்டு ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்தலை நாம் ஒரு தடவை நினைவில் மீட்டுப் பார்க்கவேண்டும். இந்தத் தேர்தல் பெறுபேறை தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கடந்த ஆண்டு நவம்பரில் தனது வழமையான மாவீரர் தின உரையில் தெளிவாகக் கணிப்பீடு செய்து வெளிப்படுத்தியிருந்தார்.

*'இவ்வாண்டு (2004) முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத்தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகள் என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இந்தப் பொதுத்தேர்தல் வழிவகுத்தது...*

*'... இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும், முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களில் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.*

*'பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கில் சிங்கள, பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடக்கு, கிழக்கில் ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது......*

*'..... இந்தப் பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.*

*'தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியல் அதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தது.....''* - இப்படிச் சுட்டிக் காட்டியிருந்தார் தலைவர் பிரபாகரன்.

இலங்கையின் அமைதி முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - இவ்வாறு ஆட்சி அதிகாரத்துக்குள் புகுந்த பேரினவாதம் எவ்வாறு குழப்பியடித்தது என்பதே நாட்டின் கடந்த 14 மாதகால அரசியல் பாடம்; பட்டறிவு.

இந்த நிகழ்வுகளில் முக்கிய பங்குதாரர்களாக இருந்தவர்கள் யார் என்பது உலகறிந்த உண்மை.

*'இனவாதமும், மதவாதமும், பழைமைவாதக் கம்யூனிசமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த தமிழர் விரோதக் கட்சியான ஜனதாவிமுத்தி பெரமுனை (ஜே.வி.பி)'* எனத் தலைவர் பிரபாகரனினால் விமர்சிக்கப்பட்ட அமைப்புத்தான் இந்தப் பேரினவாதக் குழுக்களில் முன்னணியில் திகழ்ந்தது; திகழ்கிறது.

சரியோ, பிழையோ - நியாயம் கருதியோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ - இந்தப் பேரினவாத மேலாண்மை சக்திகளை தற்போதைய ஜனாதிபதியும், அரசுத் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க இப்போது அரசுக்கு வெளியே அனுப்பிவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் என்று வரும்போது அதில் தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மையினர் பெரும்பான்மைக் கட்சிகளில் இரண்டில் ஒன்றின் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவாகும் விடயத்தில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருப்பர். அதேபோன்ற நிலை ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுக்கும் இருக்கும்.

ஆனால், ஐ.தே.கட்சி வேட்பாளராகக் களமிறங்கும் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பேரினவாத சக்திகளின் ஆதரவைக் கோருவார் போல் தென்படவில்லை. அக்கட்சிகளும் ரணிலுக்குப் பின்னால் போவதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே தென்படுகின்றன.

ஆனால், மஹிந்த விடயத்தில் நிலைமை வேறு. சிறுபான்மைக் கட்சிகளை அணைத்துக் கொள்வதா, பேரினவாதிகளின் ஆதரவை நாடுவதா என்ற விவகாரத்தில் தொடர்ந்தும் மதில் மேல் பூனையாக இருந்து வருகிறார் அவர்.


அதேவேளை, ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சி அவரைத் தெரிவுசெய்திருக்கிறது என்ற முடிவு வெளியிடப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் 'தேசப்பற்றுள்ள தேசிய சக்திகளின் ஆதரவுடனேயே மஹிந்த ராஜபக்ஷ களத்தில் குதிக்கிறார்!' என்ற அறிவிப்பு வேறு விடுக்கப்பட்டிருப்பது சிறுபான்மையினர் மத்தியில் ஆரம்பத்திலேயே பல சந்தேகங்களை உருவாக்குகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் வெற்றிக்காகப் பேரினவாதிகளை அரவணைத்ததுபோல, இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போதும் வெற்றிக்காகப் பேரினவாதிகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கைகோர்க்குமானால் - ஹெல உறுமய, ஜே.வி.பி.போன்றவற்றுடன் மஹிந்த கூட்டு வைப்பாராயின் - இந்த ஜனாதிபதித் தேர்தலும் இலங்கைத் தீவில் தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்ற சமூகங்களுக்கு இடையில் இன முரண்பாடு என்றுமில்லாதவாறு கூர்மையடைந்து மோசமான விளைவு ஏற்பட வழிசெய்யும்.

அத்தகைய தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வென்றாலும் கூட, அவருக்கு நிம்மதியான ஆட்சியை நடத்தவிடாத விபரீத நிலையைத்தான் அது ஏற்படுத்தும்.

அவர் நேரத்துடன் சிந்தித்து நல்ல முடிவை எடுப்பது சிறந்தது.

# சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா ஓகஸ்ட் 5ஆம் திகதி ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஜூலை30

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பகல் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும் என ஆலய உரிமையாளரும், பிரதம குருவுமான சிவஸ்ரீ வ.சிவானந்த ஐயர் செல்வமணி ஐயர் தெரிவித்தார். (3-203)

## இலங்கை அரசு துணைப்படைகளை வைத்து ஒரு நிழல் யுத்தத்தை நடத்திவருகின்றது

### அமெரிக்க மனித உரிமை ஆர்வலர் கருத்து

கொழும்பு,ஜூலை30

இலங்கை அரசு துணைப்படைகளை வைத்துக்கொண்டு ஒருவகையான நிழல் யுத்தத்தை நடத்திவருகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க மனித உரிமை ஆர்வலரான சட்டத்தரணி கெரன் பாக்கர் அம்மையார்.

மனித உரிமையைக் காத்து மேம்படுத்தும் உப குழுவின் 57 ஆவது கூட்ட அமர்வு வாஷிங்ரனில் கடந்த புதனன்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

பாக்கர் மேலும் கூறியதாவது:-

தமிழர் ஏற்கனவே வதைபட்டவர்கள். இருபது வருட யுத்தத்தால் இன்னல்பட்டு வருகிறார்கள்.

சர்வதேசத்தின் உதவி வடக்கு - கிழக்குத் தமிழருக்குப் போய்ச்சேராமல் இலங்கை அரசு தடுப்பதாலும் அவர்கள் மேலும் நொந்து போகிறார்கள்.

எனவே, நாம் - மனித உரிமையைக் காத்து மேம்படுத்தும் உபகுழு - அவர்களுக்காகக் குரல்கொடுக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையை இது தொடர்பில் விரைந்து செயற்பட வைக்கவேண்டும் - என்றார். (க)

## பல்கலை. ஊழியரின் வேலை நிறுத்தம் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை30

தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த யாழ்.பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று முதல் கடமைக்குத் திரும்பினர்.

சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வேலைநிறுத்தப் போராட்டத்தை இவர்கள் மேற்கொண்டுவந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவர்களுடைய கோரிக்கைகளையும், சம்பள முரண்பாட்டினையும் நீக்குவதற்காக உறுதியளித்ததையடுத்தே ஊழியர்கள் நேற்றுக் கடமைக்குத் திரும்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-13)

# சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு குறித்து ஆட்சேபனை, முறையீடு செய்யலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறத் தகுதியானவர்களின் பெயர்கள் தற்போது யாழ்.அரச செயலகத்திலும் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் நலன்புரி நன்மைகள் சபை யாழ். மாவட்டத்திலுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப விவரங்களின் அடிப்படையில் சமுர்த்தித் திட்ட நன்மைகளைப் பெறக்கூடிய குடியிருப்பாளர்களைத் தெரிவுசெய்துள்ளது.

தீவுப்பகுதி வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்.மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, வடமராட்சி தென்மேற்கு, வடமராட்சி வடக்கு, தென்மராட்சி, நல்லூர், யாழ்ப்பாணம், தீவுப்பகுதி தெற்கு, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தகுதியற்ற குடியிருப்பாளர்கள் இப்பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அதற்கான ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம் என்றும்-

தமது பெயர் இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் எனக்கருதும் குடியிருப்பாளர்கள் மீள் பரிசீலனை மேன் முறையீட்டை மேற்கொள்ளலாம் என்றும்-

ஆட்சேபனையையும், மேன் முறையீட்டையும் தத்தம் பிரதேச செயலரிடம் கையளிக்குமாறும்-

நலன்புரி நன்மைகள் சபை ஆணையாளர் எஸ்.எம்.தென்னக்கூன் கேட்டுள்ளார். (ஒ-170-202)

# குடாநாட்டு உணவகங்களில் சிற்றுண்டி பரிமாற புதியமுறை

யாழ்ப்பாணம்,ஜூலை30

குடாநாட்டில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில் உள்ள சிற்றுண்டிகள் அனைத்தையும் தட்டில் வாடிக்கையாளருக்கு எடுத்து வைக்கும் பழக்கம் தற்போது கைவிடப்பட்டு வருகிறது.

இந்த நடைமுறை சுகாதாரத்துக்கு ஒவ்வாதது என்று நீண்டகாலமாகவே குறை கூறப்பட்டுவந்தது.

இந்நிலையில், தமிழீழ சுகாதார சேவையினரும், சுகாதாரத் திணைக்களத்தினரும் இந்த நடைமுறையை மாற்ற நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து குடாநாட்டின் உணவகங்களில் படிப்படியாக இந்தப் பழக்கம் கைவிடப்பட்டு வருகிறது.

வாடிக்கையாளர் குறிப்பிட்டுக் கேட்கும் சிற்றுண்டி மட்டுமே அவருக்கு பரிமாறப்படுகிறது.

கேட்கும் உணவுப் பண்டம் மட்டும் வழங்கப்படும் என்று உணவகங்கள் பலவற்றிலும் அறிவிப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ஒ117)

## கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்த நடவடிக்கை

கோண்டாவில்,ஜூலை30

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை புனரமைத்துச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற கலந்துரையாடல் இடம்பெற்றது. கால்நடைகள் அபிவிருத்தி மற்றும் இடையூறுகள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது. யாழ்.மாவட்டதில் உள்ள கால்நடை வளர்ப்போர் சங்கங்களுக்கான சமாசம் ஒன்றை உருவாக்குவதென்றும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-49)


### உதயவாக்கு

மனவேகத்தையும் இதய வெறியையும் அறிவின் ஆழத்தையும் கொண்டே வார்த்தைகள் வெளிவருகின்றன.

- எமர்சன்

### நாளை

ஆடி 15
ஞாயிற்றுக்கிழமை
31.07.2005
திதி: ஏகாதசி
பின்னிரவு: 02.47 வரை
நட்சத்திரம் : ரோகினி
முன்னிரவு : 08.45 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம்:04.33 - 06.03
(யாவும் பழைய நேரப்படி)



# வில்லூன்றி இந்துமயானத்தில் மின்தகன வசதியேற்படுத்துக!

## மாநகர சபையிடம் வேண்டுகோள்

கொக்குவில்,ஜூலை30

வில்லூன்றி இந்துமயானத்தில் சடலங்களை மின்சாரத்தால் தகனஞ்செய்யும் வசதியை ஏற்படுத்தித் தருமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் மயான பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மயானப் பரிபாலன சபையினர் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த கால யுத்த சூழ்நிலையால் வில்லூன்றி இந்துமயானம் சீரற்றுப் போயிருந்தது. தற்போது மயானம் ஓரளவு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. ஆனால், மழை காலங்களில் சடலங்களைத் தகனஞ்செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. மயானம் குன்றும் குழியுமாக உள்ளதால் அதனை மண் இட்டுச் சமதரையாக்க வேண்டியுள்ளது. மேலும் மயானம் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் தகனக் கிரியையின்போது எழும் புகையினால் பொதுமக்கள் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். இதன் காரணமாக இங்கு மின்சாரத்தால் தகனஞ்செய்யும் வசதியை ஏற்படுத்த முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன், குடாநாட்டில் தற்போது விறகுப் பற்றாக்குறையும் நிலவுகிறது. எனவே, பொதுமக்களின் நலன்கருதி வில்லூன்றி இந்துமயானத்தில் மின்சாரத்தால் தகனஞ் செய்ய வசதி ஏற்படுத்தித் தருமாறு கோருகின்றோம் - என்றுள்ளது. (ஓ-76)

# மட்டுவில் உரக்களஞ்சியத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

சாவகச்சேரி,ஜூலை30

இரண்டாயிரமாம் ஆண்டு மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தில் சேதமான உரக்களஞ்சியம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த உரக் களஞ்சியம் 1986 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பகுதி விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு இயங்கி வந்தது. பின்னர் உரவகைகளுக்குத் தடை விதிக்கப்பட்டதால் இதன் செயற்பாடு தடைப்பட்டு இருந்தது.

தற்பொழுது 'நிக்கொட்' நிதி உதவியுடன் இந்த உரக் களஞ்சியம் செப்பனிடப்படவுள்ளது.

இதற்கான முன்னோடி நடவடிக்கைகளை கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் மேற்கொண்டுள்ளார் என்றும் -

இதனைச் செப்பனிட சந்திரபுரம் கமநல சேவை அமைப்பு முன்வந்துள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

(ஓ-31)

# விஞ்ஞான வினாடிவினாப் போட்டி; வலிகாமம் கல்வி வலய முடிவுகள்

வலி.தெற்கு,ஜூலை30

வலிகாமம் கல்வி வலயத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி வினாப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தரத்திலும் முதலாம் இடம்பெற்றவர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளனர்.

வலய போட்டி முடிவுகள்வருமாறு:

**தமிழ் மூலம்**

**தரம் 6**

நா.கஜேந்தினி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சி.காயத்திரி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் சி.சங்கீதா (இராமநாதன் கல்லூரி), சு.சுவேதிகா (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

**தரம் 7**

ந.சாம்பவி (இராமநாதன் கல்லூரி), சொ.தர்மதன் (யூனியன் கல்லூரி), மூன்றாமிடம் வே.நிந்துஜா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), பா.யசோதரன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி)

**தரம் 8**

இ.பிரமிளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.தட்ஷாயினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சு.சபாகரன் (நவாலி மகாவித்தியாலயம்)

**தரம் 9**

க.கபீர்த்தனா (யூனியன் கல்லூரி), க.கிரிஷாந்தன் (அருணோதயக்கல்லூரி), ம.காத்தாயினி (இளவாலை மெய்கண்டான் வித்தி.)

**தரம் 10**

சு.தேவகி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ந.நிரோஸ் (யூனியன் கல்லூரி), த.பிரசன்னா (இளவாலை மெய்கண்டான் வித்தி.)

**தரம் 11**

அ.சர்மிகா (இராமநாதன் கல்லூரி), ந.சாகினி (இளவாலை கன்னியர் மடம் வித்தி.), சீ.துஷாந்தி (இராமநாதன் கல்லூரி),

**ஆங்கிலம் மூலம்**

**தரம் 6**

பி.சதுர்வேதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.ஜமுனா (வட்டு.இந்துக் கல்லூரி), பி.சாஜினி (உடுவில் மகளிர்கல்லூரி),

**தரம் 7**

எஸ்.சஜீவன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.அன்டுர்ஜா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். கோபிநாத் (வட்டு இந்துக் கல்லூரி),

**தரம் 8**

எம்.துளசி (யாழ்ப்பாணக்கல்லூரி), ஆர்.கிளிஸ்ரின் தபிதா (உடுவில் மகளிர் கல்லூரி. (ஓ-152)


யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்

**பொன் விழாவும் பரிசளிப்பு விழாவும்- 2005**

*காலம்:* 31.07.2005 ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:* மு.ப. 8.30 மணி
*இடம்:* பாடசாலை மண்டபம்

*அனைத்து பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**- பாடசாலைசமூகம்.**

(38328) (39-14-42)


## அந்தியேட்டியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

*மண்ணில்* 20 - 12 - 1929



*விண்ணில்* 30 - 06 - 2005

*அமரர்*

*தெய்வநாயகி வயிரவப்பிள்ளை*

எங்கள் குடும்ப விளக்காய் இருந்த எமது அன்புக்கினிய தாயே! இன்பம் பல துறந்தெம்மை இவ்வுலகில் ஏற்றிவைத்துப் பாசமாய் எம்மிலே இணைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில் என்றென்றும் சாந்தியுடன் சரணடைய வேண்டுமென்று இந்நாளில் பிரார்த்திக்கின்றோம் .

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*
T.P.: *071230760/*
*0776660723*

**- குடும்பத்தவர்கள்.**

(ச-44111)(42-14)

## மரண அறிவித்தல்

*விஜயரத்தினம் கணேஸ்வரன்*

*(கந்தசாமி - நொயிஸ் அண்ணை)*



கைதடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் கணேஸ்வரன் அவர்கள் 28.07.2005 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புத்திரனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன், அருந்ததி, பராசக்தி (லிகிதர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மைத்துனரும் முகுந்தன் (பிரான்ஸ்), சயந்தன் (ஆஸ்திரேலியா), திருமதி திருமகள் சதானந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் உமேஷன் அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11,ஒடை ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
*பொ.பாலச்சந்திரன்*
*(மைத்துனர்).*

(38325)(42-14)

## செய்திக் கொத்து

### சக்கர நாற்காலி அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூலை30

சாவகச்சேரி மருத்துவமனைக்கு சக்கர நாற்காலி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த எஸ்.பூபாலசிங்கம் என்பவர் நேற்றுமுன்தினம் டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் சக்கர நாற்காலியைக் கையளித்தார். (ஓ-117)

### வாளி மீது ஏறி விளையாடிய சிறுமி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,ஜூலை30

கிணற்றடியில் வாளி மீது நின்று விளையாடிய ஏழு வயதுச் சிறுமி தவறி வீழ்ந்ததில் கைமுறிந்தது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மந்துவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 7 வயது மாணவி ஒருவரே இதில் காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-117)

### சட்டவிரோத மணல் கடத்தல்: ரூ.30 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,ஜூலை30

அனுமதிப்பத்திரமின்றி லொறியில் மணல் ஏற்றிவந்தவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இது குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட லொறி ஏற்கனவே இரு தடவைகள் சட்டவிரோதமாக மணல் ஏற்றியமை தொடர்பான வழக்குகளில் சம்பந்தப்பட்டதைப் பொலீஸார் சுட்டிக்காட்டினர். இதனையடுத்து மேற்படி லொறிச் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஓ-117)

### 'லிப்ட்'திட்ட அறிமுக விழா

சாவகச்சேரி,ஜூலை30

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'லிப்ட்' திட்ட அறிமுக விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநலசேவை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

'சீடா' மற்றும் 'கெயர்' சர்வதேசம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், கல்வயல், கச்சாய், நாவற்குழி வடக்கு, கைதடி தெற்கு மேற்கு, கைதடி மேற்கு, சரசாலை தெற்கு, சரசாலை மேற்கு, கரம்பைக்குறிச்சி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

(ஓ-31)

### மீனவக் குடும்பங்களுக்கு உதவு பொருள்கள்

சாவகச்சேரி,ஜூலை30

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு 'வேல்ட் விஷன்' நிறுவனம் உதவுபொருள்களை அண்மையில் வழங்கியது. தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு பொருள்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி தென் இந்தியத் திருச்சபை வளாகத்தில் இடம்பெற்றது. சுமார் 241 மீனவக் குடும்பங்களுக்கு இந்த உதவு பொருள்கள் வழங்கப்பட்டன. (ஓ-31)

### மாணவரைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை30

மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் கற்கும் புத்தூரைச் சேர்ந்த மாணவர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த குணரட்ணம் ராஜதீபன் என்ற மாணவனே காணாமற் போய்விட்டதாக முறையிடப்பட்டது.

புத்தூரிலிருந்து கடந்த 18ஆம் திகதி மட்டக்களப்புக்குப் புறப்பட்டுச் சென்ற இந்த மாணவர் அங்கு சென்று சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-13)

# மலையக ஆசிரியர் நியமனம்: மேலும் ஒரு மனு தாக்கல்

கொழும்பு,ஜூலை30

மலையகப் பகுதிக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆட்சேபம் தெரிவித்து மேலும் பத்து முஸ்லிம்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதேபோன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏனைய சில மனுக்களோடு சேர்த்து இந்த மனுவையும் பரிசீலிப்பதற்காக இந்த வழக்கு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தெல்தொட்ட, கண்டியைச் சேர்ந்த முகமட் ஷெரிபுடீன் சதாத் உட்படப் பத்துப் பேர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவில் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல், சட்டமா அதிபர் ஆகியோரே எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு தொடர்பான வழக்கிலும் இடையீட்டு மனுதாரர்களாக இ.தொ.காவினரைச் சேர்த்துக்கொள்ள நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மீண்டும் இந்த மனு, இதுபோன்று ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட ஏனைய மனுக்களோடு சேர்த்து, நீதிமன்றத்தில் எடுக்கப்படும்போது இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்று விசாரணையைத் தொடர்வதா என்பது குறித்து நீதிமன்றம் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## காணாமற்போனோர் குறித்த விசாரணை ஒத்திவைப்பு

தென்மராட்சி,ஜூலை30

காணாமற்போனோர் தொடர்பான ஆறு ஆட்கொணர்வு மனுக்கள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

## மக்கள் முகம்



பன்முகப்படுத்தப்பட்ட நல்லாசியும் வறுமை ஒழிப்பும் தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் பங்குகொள்வதற்காக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் செல்வராஜா ரமேஷ் 25.07.2005 இல் இந்தியா பயணமானார்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தினால் தெரிவுசெய்யப்பட்ட இவர், கேரளா மாநில உள்ளூராட்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் 5 நாள் கருத்தரங்கில் வடமாகாணம் தொடர்பான வறுமை ஒழிப்பு விடயங்கள் பற்றிக் கருத்துரையாற்றவுள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் இருவரில் இவரும் ஒருவர்.

யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறையில் பொருளியல் சிறப்புப் பட்டமும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுகலைமாணிப்பட்டமும் மற்றும் கல்வி, நிர்வாகத்துறைகளில் பட்டப்பின் டிப்ளோமா பட்டங்களும் பெற்றவர் ரமேஷ்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனான செ.ரமேஷ், நவாலியூர் திரு. திருமதி க.செல்வராசா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் ஆவார். (ஐ)



*கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் சமூக சேவையாளருமான கந்தையா இராமநாதனின் (ஜே.பி) சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.*

*நிகழ்வில் விழா நாயகனுக்குக் கொக்குவில், கோண்டாவில் மக்கள் சார்பில் கொக்குவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பொன்னாடை போர்த்துக் கேடயம் வழங்குவதையும் அருகில் திருமதி கந்தையா இராமநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.*



*குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை கல்விவளாகத்தில் ஆசிரியர் எஸ்.எம். கண்ணகுமாரின் சமூகக்கல்வி வினாவிடை புத்தக வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவின்போது சமூகக்கல்விப் பாடத்தில்சிறந்த புள்ளிகளைப் பெற்ற கல்வி வளாகத்தின் 10 ஆம் ஆண்டு மாணவியான கா.கேபிகாவுக்கு நூலின் ஆசிரியர் பரிசில் வழங்குவதையும் அருகில் திருச்சபையின் குரு வண.ராஜன் றேகான் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

*(படம்: தரன்- குடத்தனைச் செய்தியாளர்)*



*பிரபல மேடை ஒலிபரப்பாளரும் சமாதான நீதிவானும் நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க. த.க. பாடசாலை அதிபருமாகிய சிறில் சுகந்தரன் நவாலி ஊன்றுகோல் அமைப்பினர் நடத்திய உலகஅன்னையர்தினவிழாவைச் சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்து நடத்தியமைக்காக அவரைப் பாராட்டி ஊன்றுகோல் அமைப்பின் தலைவர் மு.ஞானசிகாமணி அன்பளிப்பொன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## இணைய சேவை ஆமை வேகத்தில்

பொதுநூலகத்தின் கணனிப் பிரிவிலுள்ள இணையத் தொடர்பு வேகம் குறைந்ததாக உள்ளது. அதனால் இணையத் தளங்களைத் திறப்பதற்கு அதிக நேரமாகிறது. எனினும், தனியார் நிறுவனங்களில் அறவிடும் கட்டணங்களை விட இங்கு கட்டணம் குறைவாகவே அறவிடப்படுகிறது என்பது உண்மைதான்.

கட்டணம் குறைவாகவுள்ளது என்ற காரணத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து கணனியைப் பலரும் பயன்படுத்த முன்வருகின்றனர். ஆனால், இணையத் தொடர்பு வேகம் குறைவாக இருப்பதால் முதல் தடவை கணனியைப் பாவித்துவிட்டு பின்னர் அந்தப் பக்கமே செல்லாதவர்கள் அதிகம். தொடர்ந்து இணையச் சேவையைப் பாவிப்பவர்கள் குறைந்த எண்ணிக்கையான அங்கத்தவர்களே.

இங்குள்ள கணனிகள் மற்றும் இணையச் சேவையை மாற்றியமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா? இந்நிலை தொடர்ந்து இருப்பின் கணனிப் பிரிவு அலகை பூட்டவேண்டியதுதான்.

கல்வியங்காடு.

தி.சாரங்கன்

## நட்டஈடு கிடைக்குமா?

யாழ். மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிப்படைந்த வீடுகளுக்கான நட்ட ஈட்டைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் யாழ். செயலகப் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கான அறிவுறுத்தல் கடிதங்களும் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால், நீண்ட காலமாக இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவு உரியவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று அறியக்கூடியதாக உள்ளது. தற்போது உலக வங்கியும் இதற்கான நிதியுதவி அளித்துவருவதாகக் கூறப்படுகிறது. ஆகவே, இந்த நட்டஈட்டைப்பெற விண்ணப்பித்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு நட்டஈடு கிடைக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சண்டிலிப்பாய்.

வி.எஸ்.இராசதுரை.

## போட்டோப் பிரதி பெறுவது வடமராட்சி கிழக்கில் பெரும் சிரமம்

வடமராட்சி கிழக்கில் போட்டோப் பிரதி மற்றும் கணனிப் பதிப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் நீண்டகாலமாகச் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இச்சேவைகளை வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள புனரமைப்புக் குழு நிறுவனத்தில் மட்டுமே பெறக்கூடியதாக இருந்தும் அங்கு கடமை நேரங்கள் மட்டும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர கடமைகள் சரிவர நடப்பதில்லை. பல ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டபோதும் மக்கள் தம் அவசர தேவைகளுக்காக இச்சேவைகளைப் பெறப்போகும் நேரங்களில் இச்சேவைகளைப் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர். இதற்காக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வத்திராயன் வடக்கு.

சீலன்.

## ஆசிரியர் பதவியுயர்வு விண்ணப்பத்தில் தவறு

வலிகாமம் கல்வி வலயப் பணிமனையில் ஆசிரிய தரம் உயர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இப்படிவங்களில் ஆசிரியர்கள் கடமையாற்றும் பாடசாலை, அதிபரின் உறுதியுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. இவ்வுறுதியுரை அதிபர்களினால் செய்யமுடியாதன. ஏனெனில், ஆசிரியர் ஒருவர் பல வருடங்கள் சேவைக் காலத்தில் பல்வேறு சேவை நிலையங்களில் கடமையாற்றி இப்போ ஓர் இடத்தில் இருப்பார். இவரின் சேவைக்காலத்தில் ஏற்பட்ட சம்பளமற்ற லீவு, சேவை இடைநிறுத்தம், ஒழுங்கான சேவை, புள்ளி விவரங்களும், தற்போது பெறவுள்ள தரமும் என்ற விடயங்கள் இவரின் சுயவிவரக் கோவையிலிருந்து அறியப்படவேண்டியவை. இவ்விடயங்களை அதிபர் ஒருவர் உறுதிப்படுத்தமுடியாது. ஏனெனில் சுயவிவரக்கோவை வலயக் கல்விப் பணிமனையிலே உள்ளது.

இந்நிலையால் பதவியுயர்வு விண்ணப்பத்தை அதிபர்களிடம் கொடுக்கும்போது சிபார்சுகளை வழங்கி விண்ணப்பத்தில் ஒப்பமிட அதிபர்கள் தயங்குகின்றனர். இதனால் தாமதமும் தவறுகளும் ஏற்பட இடமுண்டு. இதனைத் தவிர்ப்பதற்கு இவ்விண்ணப்பத்தை வழங்கி வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆசிரியர்கள் சார்பில் வேண்டுகிறோம்.

உடுவில், சுன்னாகம்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

## கடவுளின் பெயரால்...

மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உண்டான திருக்கோயில்களிற் பல, அக்கோயில்களில் சம்பந்தப்பட்டிருக்கும் சில மனிதர்கள் செய்யும் காரியங்களின் காரணமாக சாதாரண மனித வாழ்க்கைக்கே இடையூறாக அமைவது மிகவும் வேதனைக்குரியது.

தேவைக்கு அதிகமாக ஒலிபெருக்கி கோயில்களில் பயன்படுத்தப்படும் காரணத்தினால் எத்தனையோ விதமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. போதாக்குறைக்கு மக்கள் முக்கியமாக நித்திரை செய்யும் நேரங்களில் தெருத்தெருவாக ஒழுங்கை ஒழுங்கையாக நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தல்கள் ஒரு இடத்திலே நின்று செய்யப்படும் அறிவித்தல் எவ்வளவு தூரத்திற்குக் கேட்கும் என்று அனுமதிக்கத் தெரியாமல் மக்களின் வேதனையை இரட்டிப்பாக்குகிறார்கள்.

கோயில்களில் வெறுமனே பக்திப்பாடல் என்ற போர்வையில் ஒலிபரப்பப்படும் பாடல்களின் ஓசை முடிவடைந்ததும் மந்திர உச்சாடனம் ஒலி பெருக்கியில் வெளிப்படுகிறது. இது எவ்வகையில் மக்களுக்குப் பயன்படுகிறது என்று அறிஞர்கள் யாரா்வது விளக்குவார்களா?

மேலும் கோயில் நிகழ்ச்சிகளை சாக்காக வைத்துக்கொண்டு வீதியின் குறுக்கே வேகத்தடைபோடுவது (திருவிழா முடிவடைந்தாலும் அது அகற்றப்படமாட்டாது), வீதியின் குறுக்கே ஒரு கயிற்றைக் கட்டி (போதிய ஏற்பாடுகள் இன்றி) வாகனங்களைத் திருப்பி விடுவது போன்ற செயல்களும் மக்களுக்குப் பெரும் இடைஞ்சல்களை விளைவிக்கின்றன.

சம்பந்தப்பட்டவர்களில் பலர் தாம் என்ன செய்கிறோம் என்று புரியா மற் செயற்படுகிறார்கள். அதைப்பார்த்துக் கொண்டு கடவுளின் பெயரால் முழுச் சமூகமுமே சகித்துக் கொண்டிருக்கிறது. இது சரியா?

கொக்குவில்.

வை.சந்திரபாலன்.


சூரியன் FM
மெகா Blast
எழுச்சியுடன் உயர்ந்து
7 ஆண்டுகள் நிறைவில்
எங்கள் சூரியக் கொண்டாட்டம்!
ஹற்றன் டன்பாரில்
30ஆம் திகதி இரவு 8மணிக்கு
சூரியன் Mega Blast!
சூரியன் Mega Blast!
• டிப்பு • ஹரிணி
• மாணிக்கவிநாயகம்
• மாலதி லக்ஷ்மன்
எம் சிவக்குமாரின்
அக்னி யின் இசையில்
சூரியன்
டிப்பு
ஹரிணி
மாணிக்கவிநாயகம்
சந்தோஷம்!
பிரமாண்டம்!
இலவசம்!
என்றும் நம்பர் 1!
103.2FM 97.3FM
97.9FM 93.0FM

# குடாநாட்டில் கூட்டுறவு நிறுவனங்களை நலியவிடாது தடுப்பது அனைவரதும் கடமை

சர்வதேசக் கூட்டுறவாளார் தினம் ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் வரும் முதலாவது சனிக்கிழமை சர்வதேசக் கூட்டுறவாளர்களால் கொண்டாடப்பட்டுவரும் புனித தினமாகும்.

புனிதமான கூட்டுறவு இயக்கத்திலும் அது தாங்கி நிற்கும் கொள்கைகளிலும் தமக்குள்ள பற்றுறுதியை எடுத்தியம்பும் வகையில் 1923ஆம் ஆண்டு முதலாவது சர்வதேசக் கூட்டுறவாளர் விழா கொண்டாடப்பட்டு இன்று 83ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக சமாதானத்தையும் மனித சமுதாய மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில் சார்ள்ஸ் போரியர் என்ற கூட்டுறவாளரினால் வடிவமைக்கப்பட்ட வானவில்லின் வர்ணஜாலங்களைக் கொண்ட ஏழு வர்ணக் கூட்டுறவுக் கொடி சர்வதேசம் எங்கும் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் கட்டடங்கள், சங்க வளாகங்கள், மண்டபங்கள் என்பவற்றில் பறக்கவிடப்படுகிறது. மற்றும் சிரமதான வைபவங்கள், விசேட நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றுவருகின்றன.

இந்த 83ஆவது சர்வதேசக் கூட்டுறவுத் தின விழா குடாநாட்டில் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நாளை ஞாயிற்றுக்கிழமை கூட்டுறவாளர்களின் பேரணியுடன் அது நிறைவுபெறும். அத்துடன், இன்று கூட்டுறவுப் பேராளர் மாநாடு ஒன்றையும் வெகுவிமரிசையாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மேற்கொண்டு வருகின்றது.

1995ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட தன்னிச்சையானதும், திறந்ததுமான அங்கத்துவம், ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு, பொருளாதாரப் பங்களிப்பு, இறைமையும் சுதந்திரமும் கல்வி, பயிற்சி அளிப்பு தகவலும் கூட்டுறவுக்கும் மத்தியிலான ஒத்துழைப்பு, சமூகத்தின் மீதான கவனம் ஆகிய ஏழு கூட்டுறவுக் கொள்கைகள் பிரகடனப் படுத்தப்பட்டன.

கூட்டுறவு இயக்கத்தின் இப்புனிதமான கொள்கைகளையும் அவற்றில் பொதிந்துள்ள இலட்சியங்களையும் இன்றைய கூட்டுறவாளர்கள் தம் மனதில் இருத்தி நலிவடைந்து போகும் நிலையில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களை மீளக்கட்டி எழுப்ப வேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்கள் நலிவுற்றாலும் கூட்டுறவு இயக்கம் என்ற புனித சொல் என்றுமே நிலைத்திருக்கும்.

**செய்திக் கட்டுரை**

**பா.நந்தன்**

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் போன்ற கூட்டுறவுப் பெரியார்களைக் கண்டுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களை அழியவிடாது, அவை நஷ்டத்தில் செல்லாது இருப்பதைப் பாதுகாத்துக்கொள்வதும் ஒவ்வொரு கூட்டுறவாளர்களிதும் கடமையாகும்.

இதற்காக கூட்டுறவு அமைப்புகள் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்து அதன் வளர்ச்சியை ஈடுசெய்யவேண்டும்.

இதற்குக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் அந்த நிறுவனங்களை நிர்வகிக்கும் பணிப்பாளர் சபைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குடாநாட்டில் போர்க்கால சூழ்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் பல மக்களுக்குப் பெரும் சேவையாற்றின என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோமுடியாது. மக்களுக்கான நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதிலும் மற்றும் தட்டுப்பாடான அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் வழங்குவதிலும் குடாநாட்டுக் கூட்டுறவு நிறுவனங்கள் முழு அளவில் தம்மை அர்ப்பணித்து மக்களுக்குச் சேவையாற்றின.

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னரும் இடம்பெயர்ந்து மக்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் நிர்க்கதியான நிலையில் தங்கியிருந்த காலத்திலும் கூட்டுறவு நிறுவனங்கள் இந்த மக்களுக்குப் பெருமதி சேவை ஆற்றியமை இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்த இடம்பெயர்வின்போது கூட்டுறவு நிறுவனங்களை அழியவிடாது பாதுகாப்பான முறையில் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு இடமாற்றி மிகவும் சிறப்பான முறையில், அதுவும் இடநெருக்கடிகளுக்கு மத்தியிலும் இயக்கி· மக்களுக்குச் சேவையாற்றியமைக்காக அனைத்துக் கூட்டுறவாளரையும் பாராட்டுவது மிகையாகாது.

இந்த இடம்பெயர்வின்போது அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

கூட்டுறவு நிறுவனங்களில் இருந்த தளபாடங்கள், களஞ்சியங்களில் இருந்த உணவுப் பொருள்கள், சங்கக் கட்டடங்கள் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் போரினால் அழித்து நாசமாக்கப் பட்டன.

இன்றுவரை இந்த அழிவுக்கான நஷ்டஈடோ அல்லது எந்தவிதமான உதவிகளோ அரசினால் வழங்கப்படவில்லை. அதற்குரிய நடவடிக்கைதானும் எடுக்கப்படவில்லை.

இந்தவகையில், தற்போது கொண்டாடப்பட்டு வரும் 83ஆவது சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தில் கூட்டுறவு நிறுவனங்களை அபிவிருத்தி செய்யவேண்டும்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு செல்வதற்கு அரசு ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பல்வேறு விதமான உதவிகளை வழங்கவேண்டும்.

இந்தப் புனிதமான கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளில் மக்களை முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு வரும் நாளாந்தம் தமக்குரிய சங்கங்களுக்குச் சென்று தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும். அவ்வாறு மக்களின் கொள்வனவு அதிகரிக்கும் பட்சத்தில் நலிந்துபோயிருக்கும் கூட்டுறவு நிறுவனங்களை முழுமையாக நிமிர்த்த முடியும். இது ஒவ்வொருவரினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

'கூட்டுறவே நாட்டுயர்வு.'



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விடுதி மேற்பார்வையாளராக 31 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி ச.தம்பித்துரை அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவில் விழா நாயகி பதிலுரை நிகழ்த்துகிறார். கலாசாலை முதல்வர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, பிரதி முதல்வர் செ.செந்தில்மணி உட்பட விரிவுரையாளர்களையும் படத்தில் காணலாம். *(படம்: நல்லூர் செய்தியாளர்)*

### கிருஷாந்தி கொலைக் குற்றவாளிகள் உட்பட

## 20 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்ற ஜனாதிபதியின் பரிந்துரை கோரப்பட்டது

கொழும்பு, ஜூலை30

மாணவி கிருஷாந்தி கொலை வழக்கு உட்பட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களான 20 குற்றவாளிகளுக்குத் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியின் பரிந்துரை கோரப்பட்டுள்ளது.

- இவ்வாறு சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஐந்து கொலை வழக்குகளில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 20 குற்றவாளிகளுக்குத் தண்டனையை நிறைவேற்ற - உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அனுமதியோடு நீதியமைச்சின் ஊடாக - ஜனாதிபதியின் பரிந்துரைக்காக ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஹோகந்தரை கொலை வழக்கு, சதீப லக்ஷான் கொலை வழக்கு, அழகி ரீட்டா ஜோன் கொலை வழக்கு, இனோக்கா செவ்வந்தி கொலை வழக்கு மற்றும் மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கு ஆகியவற்றில் குற்றவாளிகளாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்குத் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியிடம் பரிந்துரை கோரப்பட்டுள்ளது.

இதைவிட, சுங்க அதிகாரி சுஜித் பிரசன்த்த பெரேராவின் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் மரணதண்டனைகள் நிறைவேற்ற ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த உயர் அதிகாரி தெரிவித்தார்.

சட்டமா அதிபரால் குற்றவாளிகள் தொடர்பான ஆவணங்கள் நீதியமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் -

அதைத் தொடர்ந்து உயர் நீதிமன்ற நீதியரசர்களுடன் இதுபற்றி ஆராய்ந்த பின்னர் மேற்படி குற்றவாளிகள் தொடர்பாகச் சகல விவரங்கள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஓ-206)

## இந்திய–இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை

### அந்நாட்டு நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை30

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கடந்த புதன்கிழமை இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அளித்த பதிலில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையுடன் இந்தியப் பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பது தொடர்பாக உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள இலங்கை அரசு யோசனை தெரிவித்தது. இதுபற்றி இந்தியா ஆராய்ந்துவருகிறது. ஆனால், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புக் குறித்து பேச்சு நடத்துவதற்கான நிறுவன கட்டமைப்பு ஏதும் செயற்பாட்டில் இல்லை. எனினும், பாதுகாப்புத்துறை சார்ந்த ஒத்துழைப்புக் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருநாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின் ஒருபகுதியாக ஏற்கனவே, இந்திய இராணுவப் பயிற்சி நிறுவனங்களில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

வெள்ளம், ஆழிப்பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது நிவாரண உதவி, உயர் இராணுவ அதிகாரிகளின் சுற்றுப்பயணம், கடற்படைக் கப்பல்களின் பயணம், கடற்பகுதிகளில் கூட்டுக் கண்காணிப்பு ஆகியவை இலங்கையுடனான பிற ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் அடங்கும் - என்றார் அவர். (ஐ-க)

## பஸ் – லொறி மோதல்: 25 பேர் காயம்!

கொழும்பு, ஜூலை30

சிலாபம் பகுதியில் பயணிகள் பஸ்ஸொன்றும் கொள்கலன் ஏற்றிச்சென்ற லொறியொன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் பஸ்ஸில் பயணஞ்செய்த 23 பேர் காயமுற்றனர். ஒருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முன்னேஸ்வரத்திலிருந்து சிலாபம் நோக்கி வந்துகொண்டிருந்த பயணிகள் பஸ்ஸும் சிலாபத்தில் இருந்து முன்னேஸ்வரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியுமே நேருக்குநேர் மோதிக்கொண்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணஞ்செய்த நான்கு பாடசாலை மாணவர்களும் கர்ப்பிணிப்பெண்கள் சிலரும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து தொடர்பாக இரு வாகனங்களின் சாரதிகளையும் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ-க)

## வவுனியாவில் புலிக்கொடி ஏற்றியது மீறல் என்கிறது இராணுவத் தரப்பு

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டில் புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டமை போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுபற்றி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வவுனியா வைரவப் புளியங்குளத்தில் தமிழர் உரிமைப் பிரகடன மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் புலிக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொது இடத்தில் புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டமை புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல். அதேவேளை, சீருடை அணிந்த பாடசாலை மாணவர்கள் அந்நிகழ்விற்கு வரவழைக்கப்பட்டதும் தவறானதென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:- மாநாடு நடந்த தினத்தன்று மூன்று இடங்களில் குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டுள்ளன. இது இராணுவத்தை விரட்டுவதற்குப் புலிகளால் வெடிக்கவைக்கப்பட்டுள்ளவை என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவ்விடயங்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்துள்ளோம்-என்றார் அவர். (ஐ-க)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்




இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
**இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி** (அரசடி வீதி),
**யாழ்ப்பாணம்.** T.P.: 021 2225680, 0776627373. (38044) (14.15.42)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 04 . 10 . 1936 |  | 01 . 07 . 2005 |

### *திருமதி இராசம்மா சிவகுருநாதன்*
**(பாக்கியம்)**

*அம்மா!*
*ஆலமரமாக அப்பா இருக்க நீர் வேராக*
*இருந்து தாங்கினீரே - இன்று*
*வேரிழந்த மரமாக அவர் நிற்கிறார்*
*நீர் சென்று விட்டீர் - ஓ!*
*விழுதுகள் தாங்கும் என்ற நம்பிக்கையிலா?*
*எத்தனை விழுதுகள் இருந்தாலும் மரத்துக்கு*
*ஆதாரம் வேர்தான் - மறந்து விடாதே அம்மா!*
*நாங்கள் விடைகொடுக்கின்றோம் - மீண்டும்*
*எம்மில் ஒருவராகப் பிறப்பாய் என்ற நம்பிக்கையில்....*

*01.07.2005 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 01.08.2005 திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறவுள்ளன. அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.* (38183) (25.14.15.42) **- குடும்பத்தினர்.**


## தூரிகை நுண்கலை வளாகம்

*"வீடு தேடி வரும் தொழில் வாய்ப்புக்காக பயிற்சி பெற்றிடுங்கள்"*

**மணப்பெண் ஒப்பனையாளர் பயிற்சி**

**மணப்பெண்ணுக்கான,**

- ★ *முக ஒப்பனை*
- ★ *தலையலங்காரமும் சடைநாகம் செய்தலும்*
- ★ *சாரி, நகை அணிதலும் மருதாணி இடலும்*

*என சகல செயன்முறைப் படிமுறைகளுடன் விளக்கக் குறிப்புகளும் விரிவாகத் தரப்படும்.*

**காலம் : 01.08.2005 திங்கள் மதியம் 2 மணி முதல்**
**இடம் : தூரிகை, ம.ம.வி. வீதி, நெல்லியடி.**

**- இயக்குநர்.**

(38268)(32-14-15-42)



## FASHION BEAUTY CORNER
## நவநாகரிக நங்கையின் இருப்பிடம்

*முக ஒப்பனைகள், மணப்பெண் அலங்காரங்கள், கூந்தல் அலங்காரங்கள் சமையல், கேக் ஐசிங் வகைகள் மற்றும் திருமண வைபவங்களுக்குரிய கேக் வகைகள், ஐசிங் மலர்கள் இவை அனைத்திற்குமான பயிற்சி வகுப்புகள் ஓகஸ்ட் 01.08.2005 முதல் ஆரம்பமாகவுள்ளன.*

நேரம் 4 P.M.

*பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். Working Girls இற்கு வசதியாக நேரம் ஒதுக்கி வகுப்புகள் நடைபெறும்.*



*மேலதிக விவரங்களுக்கு:*
*திருமதி ஜெயவாணி கஜேந்திரன்*
*இல.14, அம்மன் வீதி,*
*(வீரமாகாளி அம்மன் கோயில் வீதி முன்பாக)*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
Invoice: *021 222 6864.*

(C/44386)(42.14.15)



# நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

**10 ஆம் ஆண்டு**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 - 01 - 1974 |  | 29 - 10 - 1995 |

அமரர் இராசரத்தினம் ஞானாம்பிகை
*(வீரவேங்கை செந்தமிழ்செல்வி)*


**9 ஆம் ஆண்டு**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 - 06 - 1964 |  | 18 - 03 - 1996 |

அமரர் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி



**9 ஆம் ஆண்டு**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 - 06 - 1976 |  | 17 - 06 - 1996 |

அமரர் இராசரத்தினம் ரகுநாதன்
*(2ஆம் லெப். சூரியகுமார்)*

**இப்போதும் எம் கண்ணில் ஈரமது மாறவில்லை**
**எப்போதும் உம் நினைவால் இதயமது துடித்திருக்க**
**தப்பேதும் செய்யா நீங்கள்**
**எம்மைத் தவிக்க விட்டுச் சென்றதென்ன?**

**முதலாம் ஆண்டு**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 - 11 - 1937 |  | 10 - 08 - 2004 |

அமரர் முருகுப்பிள்ளை இராசரத்தினம் *(துரை)*
*திதி: தசமி*

**நீங்காத நினைவால் தூங்காத கண்களுடன் - நாம்**
**ஏங்காத நேரங்கள் இல்லை - என்றும்**
**உங்கள் நினைவில் வாழ்கின்றோம்**

**தம்பகாமம்,**
**பளை.** (38317)(42.14.15)

**- குடும்பத்தினர்.**

# விஸா இன்றித் தங்கிய ஏழு இந்தியர் கைது!

கொழும்பு, ஜூலை 30

கண்டி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் விஸா இல்லாமல் சட்ட விரோதமாகத் தங்கியிருந்துதொழில்புரிந்துகொண்டிருந்த ஏழு இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கண்டி நகரிலுள்ள தமிழ் வர்த்தக நிலையங்களைப் பொலீஸார் திடீர் சோதனைக்கு உட்படுத்திய போதே இவர்கள் கைதாகினர். இலங்கைக்கான விஸா இன்றி அவர்கள் சட்ட விரோதமாகத் தங்கியிருந்து தொழில் புரிந்து வந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்..

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் உட்பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இருவர் பின்னர்கொழும்புக்கு மேலதிக விசாரணைக்காக அழைத்து வரப்பட்டபோது தப்பிச் சென்றுவிட்டனர் என்று பொலீஸார் கூறினர். ஈரான் மற்றும் ஈராக் நாட்டைச் சேர்ந்த இருவரே வத்தளைப் பகுதியில் வைத்துத் தப்பிச் சென்றனர் எனத் தெரியவருகிறது. (க)

# தமிழ்த்தினப் போட்டிகள் வவுனியாவில் 6 இல் ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 30

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி நாட்டுக்கூத்துப் போட்டிகளும், 7 ஆம் திகதி ஏனைய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகள் வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலகத்தில் - அமைந்துள்ள மாகாண மட்டப் போட்டிகள் அலுவலகத்தில் - பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

போட்டி நடைபெறும் பாடசாலைகள், அணிகள் தங்கும் பாடசாலைகள் ஆகியவற்றின் விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் - மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3-117-202)

# உள்ளூராட்சி எழுதுநர்களுக்கு மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் எழுதுவினைஞர் தரம் II அ பதவியுயர்வுப் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணிக்கு ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான வகுப்புகள் கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மேற்படி சங்கத்தால் நடத்தப்பட்டன.

அந்த வகுப்புகளில் பங்குபற்றியவர்களை இன்றைய வகுப்பிலும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.(3-202)


## யாழ்ப்பாணத்தில்

பிரபல தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு பின்வருவோர் தேவை

### 1. Circulation Manager
### விநியோக முகாமையாளர்

*மேற்படி பதவிக்குக் குறைந்தது G.C.E.A/L பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், 40 வயதிற்கு உட்பட்டவராகவும், விநியோகம், நிர்வாகம், கணக்கியல்* (Circulation, Administration and Accounts) *ஆகிய துறைகளில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.*

### 2. Asst. Accountant
### உதவிக் கணக்காளர்

*மேற்படி பதவிக்குக் குறைந்தது* AAT (Final)/CIMA Intermediate/ICA Intermediate or equivalent *பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் வயது 25-40இற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன்* Accounts, Debt, recovery *ஆகிய துறைகளில் குறைந்தது ஒரு வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.*

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**H.R. Manager,**
**P.Box. No.23,**
**Jaffna.**

(C/44391)(42-14-15)

# இதோ நீங்களும் எப்படி ஒரு செல்வந்தர் ஆகலாம் என்பதற்கான சரியான மற்றும் தெளிவான வழி



**இதோ, நகரிலுள்ளவற்றுள் சிறந்ததும், நீங்கள் கோடீஸ்வரர் ஒருவராகக் கூடியதுமான தொழில் வாய்ப்பு.**

## நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஒரு பயிலுநர் காப்புறுதி ஆலோசகர் ஆக, பலரின் ஓய்வுக்காலத்தை திட்டமிட அல்லது அவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் படிப்பைத் திட்டமிடுவதை உறுதிசெய்ய உதவிபுரிவீர்கள். குறிப்பாகப் பல உயிர்களைக் காப்பதுடன், நீங்கள் ஒரு கோடீஸ்வரர் ஆவதற்கும் தளம் அமைத்துக் கொள்வீர்கள். மிக முக்கியமாக, வாழ்வின் நண்பர்கள் இலங்கையின் சிறந்ததும், உறுதியானதுமான காப்புறுதி தாரர்களால் காக்கப்படுவார்கள்.

## உங்கள் இலக்கை நீங்கள் அடைய நாம் உதவி புரிவோம்

முதலில், ஐ.என்.ஜி – ஐ.ஜி.ஏயின் துணையுடன், சிறந்த பெறுமதி சேமிப்பு காப்புறுதி திட்டங்களைத் தயாரித்து, உங்களுக்குத் தருவோம். (ஐ.என்.ஜி. – ஐ.ஜி.ஏ. என்பது, உலகின் மிகப் பெரிய காப்புறுதி தாரர் ஒருவரின் ஆலோசனைப் பிரிவாகும்).

மேலும் தயாரிப்புகள் மற்றும் பிரதிபலன்களுக்கும், நவீன விற்பனையாளர் நுட்பங்களுக்கு அமையவும் உங்களுக்கு அடிப்படை மற்றும் நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படும். உங்கள் பெறுமதியான வாடிக்கையாளரின் உச்ச எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நீங்கள் ஊக்குவிக்கப்படுவீர்கள்.

## அங்கீகாரம்

நீங்கள் நாட்டின் முன்னோடிக் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதியாக அங்கீகாரம் பெறுவீர்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் என்பது, இலங்கையின் பாரிய மற்றும் என்றும் நிலையான காப்புறுதி நிறுவனமாகும். தவிரவும், உலகப் புகழ் பெற்ற தரப்படுத்தல் முகவர் நிறுவனமான லண்டன் பி(f)ட்ச் ரேட்டிங்ஸ் இனால், நிறுவனத்தின் நிதி உறுதிநிலை AA- என அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் முதலாவதும் ஒரேயொரு காப்புறுதி நிறுவனமும் ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் ஆகும்.

காலத்திற்கேற்ப உங்கள் சாதனைகளை நாம் அங்கீகரிக்கும் அதேவேளை, பல விருதுகளும், பெருமைமிக்க கழகங்களின் அங்கத்துவ வாய்ப்புகளும் தகுதிப் பிரிவுகளுக்கமைவான உங்கள் சாதனைகளுக்கு காத்திருக்கின்றன.

## சுதந்திரம்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் இல், பயிலுநர் காப்புறுதி ஆலோசகராக இருப்பதாலான சிறந்த வரப்பிரசாதம் இதுவாகும். உங்களுக்கு நீங்களே தலைமையேற்று, நாள் பணிகளை எப்போது ஆரம்பிப்பது முடிப்பது என்பது தொடர்பில் தீர்மானிப்பீர்கள்.

மேற்கூறப்பட்ட விடயங்களில் உங்களுக்கு இணக்கமாயின், பயிலுநர் காப்புறுதி ஆலோசகராக எந்த நகருக்கு வர விரும்புகிறீர்கள் என்றும் உங்கள் ஆர்வத்தையும் எமக்கு விளக்கமாக எழுதி கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு, இவ்விளம்பரம் பிரசுரமாகி 7 நாள்களுக்குள் கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்கவும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பயிலுநர் காப்புறுதி ஆலோசகர்' என்று குறிப்பிடவும்.

திவிதிலின
வாழ்வுக்கான வெகுமதி

பிரகுண
வாழ்விற்கு முன்னேற்றம்

யசஇசுரு
வருங்கால சுபீட்சம்

FORMULA PLUS
Motor Insurance

மினிமுத்து

AA-(sri)

**பிராந்திய முகாமையாளர்**
**ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிடட்**
**12, வீரசிங்கம் மண்டபம், K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம். ☎ 021 222 2023**

(C/44380)(52)

SRI LANKA INSURANCE CORP. LTD.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன்
கு.ரவிக்குமார் அவர்களின் தந்தை
**நமசிவாயம் குணரத்தினம்**



அவர்கள் [27.07.2005] புதன்கிழமை இறை பதம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

– **நண்பர்கள்.**

உரும்பிராய் கிழக்கு. (38312)(21.16.18)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

பூவுலகில் 11 - 08 - 1929



மேலுலகில் 14 - 08 - 2001

காஸ்யப கோத்திரம்

அமரர் **சிவஸ்வாமிக்குருக்கள் பரமேஸ்வரசர்மா**

[அராலியூர்]

திதி: ஆடி அபரபக்கத் தசமி [30-07-2005]

அன்புள்ள அப்பாவிற்கு!

நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள்
நான்கு நாள்கள் போல்
வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாலும்
தெரியும் வரமாட்டீர்கள் என்று - இருந்தும்
உங்களை நாம் நினைக்கின்ற போது
நிழலாய் நீர் எம்முடன்....

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யும்

'பரணி வாசம்'
கந்தரோடை.

- குடும்பத்தினர்.

(38320)(21.16.18)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி விஜயரஜனி சிவசுப்பிரமணியம்
அவர்களின் அன்புச் சகோதரர்
**சிவசுப்பிரமணியம் நிமலகுமார்**

அவர்கள் லண்டனில் காலமானதை முன்னிட்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யா/சிறுப்பிட்டி அரசினர்
தமிழ்கலவன் பாடசாலை,
நீர்வேலி.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*முகாமைத்துவ உதவியாளர்,*
*மாணவர்கள்.*

(38308)
(39.21.16.18)


# கணபதி ஜோதிட நிலையம்


பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38307)(26.18.15)


# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியம் நிமலகுமார்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் நிமலகுமார் அவர்கள் 22.07.2005 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய பதிவாளர்) - தனலட்சுமியம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார், விஜயரஜனி (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை) ஆகியோரின் சகோதரனும் ஜெயரஞ்சினி (லண்டன்), மகாலட்சுமி (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் நவடினி, திரீசன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.88, குறுக்குத் தெரு,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

*தகவல்:*
**வி.சிவசுப்பிரமணியம்**
*[தந்தை].*

(சி-44103) (39-16-18-21)

# இணுவில் மத்திய கல்லூரியில் பவள விழா நாளை

வலி.தெற்கு,ஜூலை30

இணுவில் மத்திய கல்லூரியின் பவள விழாக் கொண்டாட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

பவளவிழாச் சபைத் தலைவரும் கல்லூரி அதிபருமான துரை எங்கரசு தலைமையில் காலை, மாலை என இரு அரங்குகளாக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் சரஸ்வதி கலை அரங்கிலும் இடம்பெறும்.

இணுவில் சிவன் ஆலயத்தில் காலை பூசை வழிபாடுகள் நடைபெற்று, விருந்தினர்கள் ஊர்வலமாக கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பழைய மாணவர் சங்க செயலாளர் ந.தவசோதிநாதன் வரவேற்புரையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், இணுவில் காயத்திரி பீட அதிபர் சிவஸ்ரீ தா. ம்கா தேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையும் வழங்குவர்.

கௌரவிப்பு நிகழ்வாக பொன்னாடை போர்த்தல், நினைவு சின்னம் வழங்கல், கல்லூரி ஆசிரியர்களை கௌரவித்தல் என்பன இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலாநிதி அ.சண்முகதாஸ், கலாநிதி சபா ஜெயராசா, மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதன், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

ஏற்புரை ஓய்வுபெற்ற அதிபர் செ.சோதிப்பெருமாள், திருமதி ரேணுகா குபேரநாதன் ஆகியோரால் நிகழ்த்தப்படும்.

மாலை நிகழ்வுகள் கலை நிகழ்வுளாக சரஸ்வதி கலையரங்கத்தில் நடைபெறும்.

அதிபர் துரை எங்கரசு தலைமையில் உப அதிபர் க.சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா, இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் டாக்டர் வை.லோகநாதன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன், உடுவில் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

கலை நிகழ்வுகளாக வாழ்த்துப்பாடல், குழுப்பாடல், ஆங்கிலப் பாடல்,நடனம், 'விடிவைத் தேடி' - நாடகம், பக்திப்பாடல்கள் என்பன இடம்பெறவுள்ளன. (3-152)

# இளைஞர் சங்கக் கூட்டம் நாளை

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணி மனையில் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (3-202)

# பங்குச் சந்தையில் 'டயலொக்'

'டயலொக்' ரெலிக்கொம் தொலைத் தொடர்பு நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தையில் தனது பங்குகளை விற்க ஆரம்பித்துள்ளது. அதன் பங்கு வர்த்தக நடவடிக்கையை கையடக்கத் தொலைபேசி SMS ஊடாகக் கையாளும் வசதியையும் அது தொடங்கியது.

இப்புதிய திட்டத்தை நிதி அமைச்சர் சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு கொழும்பு உலக வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பங்குச் சந்தையில் ஆரமபித்துவைத்தார்.

இதன் மூலம் முதலீட்டாளர்கள் தங்களது கையடக்கத் தொலைபேசி SMS முறை மூலம் பங்கு வர்த்தகத்தை அவதானிக்கலாம்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ரெலிக்கொம் மலேஷிய பெர்ஹாட் அன்ட் டயலொக் ரெலிக்கொம் லிமிட்டெட்டின் தலைவர் தன்சிர் டாடோ முஹமட் ரசீத் மன்சூர் அங்கு உரையாற்றுகையில்:-

இலங்கை நல்ல முதலீட்டுத்தளம் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். அதேபோல் எமது வாடிக்கையாளர்கள் மீதும், டயலொக் நிறுவனம் ஊழியர்கள் மீதும் நாம் நல்ல நம்பிக்கை கொண்டுள்ளோம்.

டயலொக் நிறுவனத்தை அடுத்த அத்தியாயத்திற்கு நகர்த்த சர்வதேச உயர்மட்டத்திலிருந்து நிதி எமக்குக் கிடைத்துள்ளதோடு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை பிரஜைகள் எம்முடன் இணைந்துள்ளனர். இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். - என்றார்.

CSE முறை இணைக்கப்பட்ட மொமைல் தொலைபேசி மூலம் பங்கு வர்த்தகத்தில் பங்குபற்றும் வாய்ப்பை 'டயலொக்' தற்போது ஏற்படுத்தியுள்ளது.

(ஐ-க)


# மலையாள பகவதி ஜோதிடம்

பண்டித் மூர்த்தி

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர் கணவன் - மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூன்யத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்குப் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **ஏ.எஸ்.என். சுற்றுலா விருதி**
392 - 392A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021- 222 5399, 077 9233191. (26-18-16)

(38291)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

வையத்துள் அறிமுகம் 05 - 04 - 1927



தெய்வத்துள் சங்கமம் 10 - 08 - 2004

அமரர் **தம்பிப்பிள்ளை தம்பியையா**

[முன்னாள் பிரபல ஒலி, ஒளி அமைப்பாளர்]

திதி: 30-07-2005

பாசத்தின் உறைவிடமாய் அன்புகாட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப்
பிரிந்து ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்களைவிட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

புளியங்கூடல் சந்தி,
வேலணை.

க.இராசதுரை (பெறாமகன்),
குடும்பத்தினர்

(38329)(21.16.18)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **கு.குகதாசன்**
அவர்களின் அன்புத் தந்தை
**நமசிவாயம் குணரத்தினம்**

அவர்களின் மறைவினால் [27.07.2005 புதன்கிழமை] துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/மயிலணி சைவ மகா
வித்தியாலயம், சுன்னாகம்

அதிபர், ஆசிரியர்கள்,
சிற்றூழியர்கள்,
மாணவர்கள்.

(38309)
(39)

# ஓராண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 12 - 08 - 1940



உதிர்வு 10 - 08 - 2004

**திருமதி சிதம்பரலிங்கம் சாந்தநாயகி**

ஆண்டு ஒன்று உருண்டு ஓடினாலும்
ஆறவில்லை அம்மா எம் துயரம்
நீ மீண்டும் எம் தாயாக எப்போது
பூமியில் மலர்வாயோ?

91/4,சங்கத்தானை,
சாவகச்சேரி.

*கணவர்,*
*பிள்ளைகள், உறவினர்கள்.*

(38310)(21.16.18)

# சபிண்டீகரண அழைப்பு

பிறப்பு 21 . 12 . 1921



இறப்பு 01 . 07 . 2005

**திருமதி நாகம்மா சடாச்சரம்**

அன்புடையீர்!

கடந்த 01.07.2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி **திருமதி நாகம்மா சடாட்சரம்** அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'ஸ்ரீநிகேதன்'*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

குடும்பத்தினர்.

(38184) (39.21.16.18)

# பாடசாலைகள் உதைபந்தாட்டம்; சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன

யாழ்ப்பாணம்,ஜூலை30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய 13 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.



கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் எதுவித கோலினையும் போடாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை உடைப்பு வழங்கப்பட்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை வெற்றிகொண்டு வெற்றிக்கிண்ணத்தினைத் தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் யாழ். பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத் தலைவரும் யாழ். மத்திய கல்லூரி அதிபருமான கே.இராசதுரை வழங்கினார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (3-190)



வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையில் வவுனியாவில் நடந்த மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது. வெற்றிபெற்ற அணியில் இடம்பெறும் வீரர்கள் கல்லூரி அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: தமிழினியன்)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் ஒன்றுகூடல் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை30

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் ஒன்றுகூடலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் டி.எம்.வேதாபரணத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன், யாழ். பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் க.இராசதுரை, யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவர் பொ.கமலநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (3)

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ண ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை30

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு :-

**இன்று**

✱ கால் இறுதி ஆட்டம் - காலை 8.30 மணி -யங்ஸ்ரார் வி.க. எதிர் சென்றல் வி.க.

✱ நண்பகல் 1.30 மணி - ஜொனியன்ஸ் வி.க. எதிர் கே.ஸி.ஸி.ஸி. வி.க.

**நாளை**

✱ அரையிறுதி ஆட்டம் - காலை 8:30 மணி - பல்கலைக்கழக வி.க. எதிர் பற்றீஸியன்ஸ் வி.க. (3)

## விளையாட்டு

# முத்தரப்பு கிரிக்கெட் இன்று ஆரம்பம்

இந்தியா இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இன்று துவங்குகிறது. இந்தத் தொடரின், இன்றைய முதல் ஆட்டத்தில் இந்தியா, இலங்கை அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன. தம்புள்ளவில் பகல் - இரவாக நடக்கும் இந்தப் போட்டியில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் பங்கேற்பது கேள்விக் குறியாகியுள்ளது.



கண்டியில் சில தினங்களுக்கு முன் முடிந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டி, இரண்டாவது இன்னிங்சில் வாஸ் பந்து வீசவில்லை. வலதுகால் தொடைப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டு, பந்து வீசச் சிரமப் பட்டார். அவரது காயம் இன்னும் முழுதாகக் குணமாகவில்லை - என்று கூறப்படுகிறது. (ஒ)

# குடிபெயர்கிறது ஐ.சி.சி.

லண்டன், லோட்ஸ் மைதானத்தில் 96 ஆண்டுகளாக இயங்கி வந்த ஐ.சி.சி. தலைமை அலுவலகம், நேற்று அங்கிருந்து விடைபெற்றது. ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் துபாயில் புதிய அலுவலகத்தில் இயங்கப் போகிறது. ஐ.சி.சிக்கு வரிச்சலுகை அளிக்க பிரிட்டன் அரசு மறுத்து விட்டதைத் தொடர்ந்து, இந்த இடப் பெயர்ச்சி நடக்கிறது.

1909ஆம் ஆண்டு இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகியவை இணைந்து ஐ.சி.சி.யை உருவாக்கின. அப்போது அதன் பெயர் இம்பீரியல் கிரிக்கெட் கான்பிரன்ஸ். 1965இல் இந்தப் பெயர் சர்வதேச கிரிக்கெட் கான்பிரன்ஸ் எனட மாற்றப்பட்டது. 1989இல் மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சர்வதேச கிரிக்கெட் சபை ஆனது. (ஒ)

# விளையாட்டுத்துறையில் சாதனைகள் புரிந்துவரும் வீராங்கனை





**குருநாகலில் அண்மையில் நடைபெற்ற 20 அணிகளுக்கிடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கேற்ற யாழ். அணியில் இடம்பெற்று சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டு விருதுபெற்ற செல்வி ஸ்ரீகாயத்திரி திருநாவுக்கரசுவின் விசேட செவ்வி.**

• கேள்வி: காயா, நீங்க முதல்ல உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்...?

✱ பதில்: என்னைப் பற்றியா....! நான் இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். தொடர்ந்து தரம் 6இல் இருந்து உயர்தரம் வரை வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன்.

உயர் தரத்தில் நான் விஞ்ஞானப் பிரிவையே தேர்ந்தெடுத்துக் கற்றேன். தற்போது குருநாகல் வயம்ப பல்கலைக்கழகத்தில் உணவும் போசாக்கும் பீட முதலாம் வருட மாணவியாக உள்ளேன்.

எனது சொந்த இடம் புன்னாலைக்கட்டுவன். தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கிறேன். எனக்கு 2 இரண்டு அக்கா. ஒரு அண்ணா, ஒரு தம்பி. எனது அண்ணாவும் அக்காவும் மருத்துவபீட மாணவர்கள். மற்ற அக்கா ஒரு டாக்டர். தம்பி சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன். மற்றது எனது அம்மா, அப்பா. இதுதான் எனது குடும்பம். வேறு என்ன?

## கங்கா

• கேள்வி: விஞ்ஞான பீட மாணவராக இருக்கும் உங்களுக்கு விளையாட்டில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?



குருநாகல் ஆட்டத்தில் பந்தை எறியும்போது...

✱ பதில்: விளையாட்டிற்கும் படிப்பிற்கும் எந்தவிதமான தொடர்புமே இல்லை என்றுதான் நான் சொல்லுவேன். நான் எனது பாடசாலைக் காலத்தில், குறிப்பாக தரம்6 இல் இருந்தே வலைப்பந்தாட்டத்தில் 'சூட்' பண்ணுவதற்கான பயிற்சிகளை எடுத்துவந்துள்ளேன்.

சின்ன வயசிலேயே இந்த ஆர்வம் எனக்குள் வந்தமைக்கு எனது அக்காமார்தான் காரணம். எனது அக்காமார் இரு வரும் வலைப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அப்போது எனக்கு 10, 11 வயது தான் இருக்கும். எனக்கும் அவர்களைப் போல விளையாடவேண்டும் என்ற ஆர்வம். அப்போதிருந்தே நான் இதில் பயிற்சிகளை எடுக்க ஆரம்பித்து விட்டேன். முதன்முதலில் பாடசாலை மட்டத்தில் தரம் 8 படித்துக்கொண்டிருந்தபோது 15 வயதுப் பிரிவில் விளையாடினேன். பாடசாலையில் எனக்குப் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் லலிதாம்பிகை மகேஸ்வரன்தான் ஊக்கமளிப்பவராகவும் பயிற்சிகள் தருபவராகவும் இருந்தார். நான் ஏதாவது போட்டிகளில் பங்குபற்றவுள்ளேன் என அறிந்தால் அன்றிலிருந்து என்னைத் தனியாக அழைத்துப் பயிற்சிகள் தரத் தொடங்கிவிடுவார்.

மாலை நேரங்களில் கூட பாடசாலையில் நின்று பயிற்சிகள் தருவார். இதேவேளை - பாடசாலைக்கு வெளியே யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் திருமதி ரூபசிங்கம் ஆசிரியரும் எனக்கு நிறையப் பயிற்சிகளையும் தன்னம்பிக்கையையும் ஊக்குவிப்பையும் தந்துள்ளார். தற்போதும் தந்துகொண்டிருக்கின்றார்.



விருதினைப் பெறும்போது...

இவர்களது பயிற்றுவிப்பும் ஊக்குவிப்பும் தான் என்னை இந்த நிலைக்குத் தள்ளியது. நான் இந்த நிலைக்கு வருவதற்கு இவர்கள்தான் முதற்காரணம்.

நான் வலைப்பந்தாட்டம் மட்டுமல்ல கூடைப்பந்தாட்டமும் விளையாடுவேன். எனக்கு விளையாட்டில் இன்னும் நிறையச் சாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. அதனை நான் செய்வேன்.

நான் இவ்வாறு வெற்றிபெறுவதற்கு எனது பெற்றோர், சகோதரர்களும் காரணம். எனது அம்மாவும் அப்பாவும் எனக்கு நிறைய ஊக்குவிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறார்கள். அத்துடன், எனது சகோதரர்களும் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள். அதுவும் எனக்கு ஒரு பெரும் வெற்றிதான்.

• கேள்வி: நீங்கள் பாடசாலையை விட்டு விலகிவிட்டீர்கள். தற்போது எவ்வாறு போட்டிகளில் பங்குபற்றுகிறீர்கள்....?

✱ பதில்: பாடசாலையை விட்டு விலகினாலும் பாடசாலை 'பட்டபிளை' விளையாட்டுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள கொம்பியூட்டர் P3 மொனிற்றர், ஓடியோ டெக், வீடியோ டெக், பனசொனிக் ரெலிபோன் றிசீவர், ஈகுலைசர், வீடியோ CD ரைக்கோடர், சொனி T.V 16', சொனி DVD, எப்சன் பிறிண்டர் LQ 300+, சொனிகார் அம், அன்ரனா மோட்டர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அபிராமி, இல.768, கே.கே.எஸ்.றோட், தட்டாதெருச்சந்தி. (38274)

ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (38263)

சிறிது காலம் பாவித்த Arbico தண்ணீர்த் தாங்கி 1000 l) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0713056757. (38225)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38286)

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். T.P.: 0114613157. (38326)

## வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,ஆஸ்பத்திரி வீதி, 514ஆம், 515ஆம், 516ஆம், 517ஆம் இலக்கங்களை உடைய வீடுகள் (யாழ்ப்பாணம் பழைய O.P.D. இற்கு முன்பாக) உடன் விற்பனைக்கு உண்டு. (தொடர்பு: சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும்) T.P.: 021- 222 8024. (38327)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு அருகில் 5 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3053011. (38299)

சக்கலாவத்தை வைரவர் கோயிலடி, கரணவாய் வடக்கு, கரவெட்டி என்னுமிடத்தில் கிணற்றுப் பங்குடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6288725 (38305)

## வீடு விற்பனைக்கு

இல.55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (38164)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்தம் வாடகைக்கு. இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0777 593722, 0776 - 991899 (38049)

## தேவை

சிறிலங்கா நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு ஒன்று தேவை. மாற்றிக் கொடுக்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். T.P.: 0776 949753, 0776139275 (38049)

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

தொல்புரம் மத்திய சக்தி முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பொக்கண்ண மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் பெற்றோர் சங்கத் தலைவர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் பிரதம விருந்தினராகவும் தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் இ.ஸ்ரீரஞ்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (3-28-119)

* * *

நீர்வேலி காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத் தலைவர் சி.அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன், கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் து.செம்பருதி, வலி.கிழக்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் நா.சுந்தரலிங்கம், வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி திருமதி கோமளாதேவி விசாகப் பெருமாள் நீர்வேலி றோ.க.த.க பாடசாலை அதிபர் [illegible] வேலழகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர் (3-203)

## தவறிவிட்டது

27.07.2005 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் செல்லும் போது மினிபஸ்ஸில் ஒரு சிறுதொகைப் பணமும் நகைகளும் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: இல.145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (38298)

குளப்பிட்டி வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நடராஜசிங்கம் கிருபாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பளை வைத்தியசாலையிலோ அல்லது மேற்கூறிய முகவரியிலோ ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.(சி-44102)

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையை சேர்ந்த ஜோசப் மெற்றில்டா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (835362930V) மற்றும் வன்னி அனுமதிப்பத்திரம் என்பன கடந்த 23.07.2005 சனிக்கிழமை கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 0776 536623, 021 22 85735. (38290)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மாஸ்வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கல்பேட்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சிவகுமாரன், கல்வியங்காட்டுச்சந்தி, பெற்றோல் செற் அருகில் உள்ள புலவனார் வீதி.(38232)

புறொயிலர் 1 kg 160/-. சுத்தம் செய்தது 1 kg 240/-. கல்பேட், கோழித்தீன்கள், புறொயிலர் குஞ்சுகள் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில். (38303)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 08-08-2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (38283)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி/42045)


## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 11 - 12 - 1975



உதிர்வு 30 - 06 - 2005

### திருமதி யசோதினி ஜெகசீலன்

நீண்டகால நிலையான வாழ்க்கை வாழுவோம்
என்று நிம்மதியாக குஞ்சுகளுடன் இருக்க
குறுகிய கால வாழ்க்கையுடன் நீண்டதூரம்
நிலையாக நிலைத்திருக்கச் சென்றாயோ எமைவிட்டு?

இன்று (30.07.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற நினைவஞ்சலி, வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்வதோடு மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- கணவர், பிள்ளைகள்.

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (38333) (39-21-16-18)

## விளையாட்டுத்துறையில்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தில் உள்ளேன். அதன் ஊடாகத்தான் போட்டிகளில் பங்குபற்றச் செல்வேன். 'பட்டபிளை' விளையாட்டுக்கழகத்தினூடாகப் போட்டியிட்டே மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றத் தெரிவானேன்.

2006ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள கனிஷ்ட தேசிய வலைப்பந்தாட்டப்போட்டிக்கான அணிகளைத் தெரிவுசெய்வதற்கே மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி குருநாகலில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கனிஷ்ட தேசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு எமது மாவட்டத்தில் இருந்து மைதிலி இராஜரட்ணம், பிருந்தா சோமசுந்தரம் ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளவர்கள் 21 வயதுக்குட்பட்டிருக்கவேண்டும். எனக்கு 22 வயது ஆகிவிடும் என்பதால் என்னைத் தெரிவு செய்யவில்லை. நான் தெரிவுசெய்யப்படாமை சிறிது கவலைதான். என்றாலும், எனக்கு மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனைக்கான விருது வழங்கப்பட்டமை நினைக்கமுடியாத மகிழ்ச்சி.

● கேள்வி: வேறு மாவட்டங்களுக்கு நீங்கள் போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் போது உங்கள் மனநிலை எவ்வாறிருக்கும்?

✱ பதில்: மிகவும் சந்தோசமாகத்தான் இருக்கும். இங்கிருந்து நாம் முன்னேற முடியாது. வெளிமாவட்டங்களுக்குச் செல்லும்போது அங்கு அவர்கள் விளையாடும் முறைகள், விதிகள் போன்றவற்றைப் பார்த்து முன்னேறமுடியும். இங்கு நாம் விளையாடுவதை விட அங்குள்ள அணிகள் மிகவும் விரைவாக விளையாடும். அதனைப் பார்க்கும்போது எமக்கும் அவ்வாறு விளையாடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இங்கேயே இருந்துகொண்டு எதனையும் சாதிக்கமுடியாது. வெளியேயும் என்ன நடக்கிறது என்று பார்க்கவேண்டும்.

● கேள்வி: இதுவரை நீங்கள் விளையாடிய ஆட்டங்களில் வெற்றியீட்டியமை பற்றியும் அதன் மூலம் உங்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் பற்றியும் கூறுவீர்களா?

✱ பதில்: எனது விளையாட்டுவாழ்வில் விசேடமாக இனங்காணக்கூடிய வெற்றிகள் பல உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிநிலை; வளர்ச்சிக்கான படிநிலை.

எனது விளையாட்டுத்துறை வாழ்வில், நான் 2002 ஆம் ஆண்டு எனது கல்லூரியில் விளையாட்டு அணி முதல்வராக இருந்தேன். அதே வருடமே எனக்குச் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான தங்கப்பதக்கம் கிடைத்தது. அத்துடன், பாடசாலையில் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் சம்பியனைப் பெற்றுக் கொண்டேன்.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை பாடசாலை வலைப்பந்தாட்ட அணியில் உறுப்பினராக இருந்தேன். அந்த அணியூடாக இடைவிடாது தொடர்ந்து விளையாடி வந்தேன்.

2000ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை பாடசாலை கூடைப்பந்தாட்ட அணியில் உறுப்பினராக இருந்ததுடன் 2002 ஆம் ஆண்டு அணித்தலைவராகவும் இருந்து சிறப்பாக விளையாடினேன்.

அத்துடன், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியின் உறுப்பினராகவும் இருந்து 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற சிரேஷ்ட தேசிய கூடைப்பந்தாட்டச் சுற்றிலும் பங்குபற்றினேன்.

1998ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை பாடசாலை பட்மின்ரன் அணியிலும் உறுப்பினராக இருந்தேன்.

அத்துடன், வலய மட்டத்தில் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பங்கு பற்றிய எமது அணி முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. அந்த அணியில் நானும் ஓர் உறுப்பினராக இருந்தமையால் அதுவும் எனக்கு மிகவும் பெருமையளித்தது.

2004 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியில் குண்டெறிதலில் சாதனை படைத்துள்ளேன் என்பதுவும் எனக்குப் பெருமை சேர்த்த விடயம்.

இவற்றை விட, தற்போது மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட அணியில் என்னை சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்தமை மறக்கமுடியாத மகிழ்ச்சியை எனக்குத் தருகின்றது.

2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் விளையாடுவது குறைவு. பிரதேச ரீதியில் நடைபெறும் ஒரு சில போட்டிகளில் பங்குபற்றி வருகின்றேன். இனிமேல் பல்கலைக்கழக அணியிலும் இணைந்து போட்டியிடுவேன்.

● கேள்வி: தற்போது விளையாட்டு அணிகளில் உள்ள பெண்களுக்கும் விளையாட்டில் ஆர்வம் செலுத்துபவர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

✱ பதில்: விளையாட்டு என்றைக்குமே படிப்பை குழப்பவே குழப்பாது. இதனை எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும். வெற்றி அடைவதற்குப் பயிற்சிகள்தான் முதலில் அவசியம். அத்துடன், பெற்றோர்கள், ஆசிரியர்களதும் ஊக்குவிப்பு, ஒத்துழைப்பு போன்றனவும் அவசியம். இவை இருந்துவிட்டாலே போதும் எந்தவொரு செயற்பாடானாலும் நாம் அதில் வெற்றியை மட்டுமே அடைவோம்.

எனக்கு இவர்களது ஆதரவு நிறைய இருந்தது. அத்துடன் எனது நண்பிகளும் எனக்குத் துணையாக - உதவியாக - இருந்தார்கள்.

எந்தப் போட்டி என்றாலும் முதலில் நாம் பங்குபற்றவேண்டும். வெற்றியோ தோல்வியோ அதனைப் பின்னர் பார்க்கவேண் டும். தோல்விதான் வெற்றியின் முதற்படி என்பதனை எப்போதும் மனதில் வைத்துக் கொண்டு போட்டிகளில் பங்குபற்ற வேண்டும்.

பெண்களால் செய்யமுடியாதது எதுவுமே இல்லை. எதுவானாலும் எம்மால் சாதிக்க முடியும்.

✱




### ஜோதிடம்

**Pandit Kr. Luxumy Narasimha**

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் - மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்குப் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **SRI SAWBAKYA INN**

Guest House,

235/7,PointPedro Road, Anaipanthy, Jaffna.

(38176) T.P.: 021- 222 6779, 077 9233070. (21.16.18)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை இராசம்மா



கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இராசம்மா அவர்கள் 27.07.2005 புதன்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற நாகநாதர் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பி ஐயா மற்றும் நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெய்வேந்திரன் (இளைப்பாறிய கணக்காளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்), மகேந்திரன் (ஜேர்மனி), புவனேந்திரன் (ஜேர்மனி), புஸ்பராணி (லண்டன்), ஜெயராணி (ஜேர்மனி), மோகனராணி (ஜேர்மனி), பேரின்பராணி (ஜேர்மனி), நாகநாதன் (ஜேர்மனி), சாந்தராணி (ஜேர்மனி), லோகச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் சுசீலாதேவி (உபதபால் அதிபர், ஈச்சமோட்டை), காஞ்சனாதேவி (ஜேர்மனி), வசந்தாதேவி (ஜேர்மனி), யோகநாதன் (லண்டன்), விக்னராஜா (ஜேர்மனி), பிறேம்குமார் (ஜேர்மனி), ஜெயமலர் (ஜேர்மனி), பத்மகுமார் (ஜேர்மனி), அஞ்சலை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் விதூர்சன், கர்சன், முகுந்தன், யாழினி, யோணதன், டானியல், கௌரிசங்கர், அபிராமி, காயத்திரி, துஸிதரன், வெங்கடேஸ்வரன், வித்யா, ஆரூபன், அஸ்வினி, சயந்தன், மிதுலா, கௌதமி, பிரணவி, சாயித்தியன்,சரண், பிரியங்கா, சாரங்கன், மிதுன், சுபான், ஆரபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் பிறிமன் நகரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ.தெய்வேந்திரன் (மகன்) T.P.: 491262

செ.லோகசந்திரன் (மகன்) (பிறிமன்,ஜேர்மனி). T.P.: 0049-421-400456

MPCS லேன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(38337)(21-16-32-18)

# யுத்தகாலத்தை விட சமாதான சூழலில் பெரும் இழப்புகளை சந்தித்துள்ளோம்

## முல்லை அரசியல் பொறுப்பாளர் கூறுகிறார்

புதுக்குடியிருப்பு,ஜூலை30

யுத்தகாலத்தைவிட சமாதான காலத்தில் தான் நாம் பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளோம். யுத்தநிறுத்தம் ஏற்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகியும் எமது மக்களுக்கு எந்த விதமான முன்னேற்றமான செயற்பாடுகளும் செய்யப்படவில்லை.

- இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன்.

சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

சமாதான சூழல் உருவாக்கப்பட்டு, பேச்சுகள் நடைபெற்று, பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்ட போதும் எதுவும் நடக்கவில்லை.

இதன் பின்னர் ஏற்பட்ட ஆழிப்பேரலை எம்மால் எண்ணிப் பார்க்கமுடியாத அளவிற்குச் சேதத்தை உண்டுபண்ணிவிட்டது.

இந்நிலையில்தான் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், இதன் மூலம் கிடைக்கப்போகும் உதவிகள் எதனையும் சிங்களதேசம் எமக்குத் தருவதாக இல்லை. ஆனால் தற்போது அவை எல்லாம் செயலிழந்து விட்டன.

பாண்டவர்கள் போல எமது உரிமைக்காக நாமும் போராட வேண்டும். அவர்கள் கேட்டதைப்போல ஐந்து வீடுகளைக் கூடத் தருவதற்கும் ஸ்ரீலங்கா அரசு தயாராக இல்லை.

இந்த சமாதான காலத்திலும் கூட நாங்கள் 150 இற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். பொறுப்பாளர்கள், தளபதிகளை இழந்துள்ளோம்.

அவர்களை மட்டுமல்ல, எமது நாட்டுச் சொத்தான கடல் வளங்களையும் இழந்த நிலையில் உள்ளோம். கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகச் சென்று தொழில் செய்ய முடியவில்லை. இதனை நினைக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது.

எமது மக்கள் சலுகைகளுக்காகப் போராடவில்லை. உரிமைகளுக்காகத்தான் போராடுகின்றார்கள். எமது மக்களின் எழுச்சியை நாம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறிக் கொண்டேயிருக்கின்றோம். இதனை சர்வதேசம்தான் உணர்ந்துகொள்ள வேண்டும்- என்றார்.

தொடர்ந்து மணலாறு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் ந.அருணாசலம், முள்ளியவளை தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோரின் உரைகளும் இடம் பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உபசெயலாளர் இ.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், திணைக்களத் தலைவர்கள், கல்விமான்கள், வர்த்தக சங்கத்தினர், கூட்டுறவுச் சங்கத்தினர், மாணவ அமைப்பினர் எனப் பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டனர். (3-353-203)

## 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

வட்டக்கச்சி,ஜூலை30

வட்டக்கச்சி, மாயவனூர் கிராமத்தில் மினி சூறாவளியொன்று ஏற்பட்டு சொத்தழிவினை ஏற்படுத்தியுள்ளது.

மாயவனூர் கிராமத்தில் உள்ள நகுலன் குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த14 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சூறாவளி வீசியுள்ளது.

இதனால், பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்தன. ஆயினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதுபற்றி மக்கள் கிராமசேவையாளரிடம் முறையிட்டதையடுத்து மாயவனூர் கிராமசேவையாளரான எஸ்.ரூபசிங்கம் நேரில் சென்று இந்த அழிவுகளைப் பார்வையிட்டு கரைச்சி பிரதேச செயலருக்கும் அறிவித்துள்ளார்.

இதனால் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (8-405)




## இராமநாதபுரம் பகுதியில் வருமான அதிகரிப்புத் திட்டம்

வட்டக்கச்சி,ஜூலை30

இராமநாதபுரத்தில் உள்ள மாவடிக் கிராம மக்களுக்கான வருமான அதிகரிப்புத் திட்டம் ஒன்றினை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

போரூட் நிறுவன நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் நாற்பது பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.


இத்திட்டத்தின்படி உரிய பயனாளிகளுக்கு சுயமான தொழில்களைத் தொடங்குவதற்கான பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் தொழில்களில் ஈடுபடும்போது அதன் முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உழைப்பாளர்களை இழந்த,பெண் குடும்பத்தலைவர்களைக்கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களே இதற்கு தெரிவு செய்யட்டதாகவும் -

இத்தெரிவு சமூக, பொருளாதார அபிவிருத்திக் குழு, ஊரக வளர்ச்சிப் பணியகம், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர், போரூட் நிறுவன பிரதிநிதிகள் என்பவர்களால் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டன என்றும் -

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஆடுவளர்ப்புக்காக ஆடுகள் வழங்கப்பட்டன. மூன்று பயனாளிகளுக்கு சிறுவியாபார நடவடிக்கைகளுக்கான பொருள்களும் ஒருவருக்கு நன்னீர் மீன்பிடிக்கான உபகரணங்களும் ஐந்து பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புக்காக கோழிகளும் இருவருக்கு தையல் இயந்திரங்களும் இருபது பேருக்கு கிடுகு, கயிறு போன்றனவும் வழங்கப்பட்டன. (3-405)



கற்சிலைமடுவில் இருந்து கருவேலன் கண்டல் கிராமத்தைச் சென்றடையும் வீதியிலுள்ள பாலம் மிக நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்தப் பாலம் திருத்தப்படாமையால் வீதியை மேவி நீர்பாய்வதைப் படத்தில் காணலாம்.
*(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## பூநகரி பாடசாலைகளுக்கு மீசாலை மாதர் உதவி

பூநகரி,ஜூலை30

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு மீசாலை மேற்கு மாதர் சங்கத்தினரும் தனியார் ஒருவரும் 20 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மாதர் சங்கத்தினர் 10 ஆயிரம் ரூபாவையும் சுவிஸில் வசிக்கும் ஆருஷா என்பவர் 10ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

இந்நிதி வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை பழைய மாணவர் சங்கச் செயலாளர் க.சயுதாவும் பாடசாலைக் கொடியை வித்தியாலய உப அதிபரும் ஏற்றி வைத்தனர்.

கருத்துரைகளை மேற்படி மாதர் சங்கத் தலைவியும் மீசாலை மேற்கு கிராம அலுவலரும் நிகழ்த்தினர். (3-403-202)

## திருக்குறள் தமிழ் இலக்கியத் தேர்வில் கோட்ட மட்டத்தில் பரிசில் பெறுவோர்

கிளிநொச்சி,ஜூலை30

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் திருக்குறள் மாநாட்டை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப் பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளள.

போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் சான்றிதழும் பரிசில்களும் பெற்றவர்களின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியது.

கோட்ட மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் பெறுபவர்களின் விவரம் வருமாறு-

**கரைச்சிக் கோட்டம்** - ந.விவேந்தன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), வி.அனுசா (திருவையாறு உ.நி.பள்ளி), ப.லாதாமினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**பூநகரிக் கோட்டம்** - சி. சுதர்சிகா (பூநகரி உ.நி.பள்ளி).

**பிரிவு 'அ'**

**கரைச்சிக் கோட்டம்** -சி.துளசிகன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), தர்சியா( இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி), இ.கஸ்தூரி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), யோ.நிரோயா(புனித திரேசா பெண்கள் கல்லூரி).

**கண்டாவளைக் கோட்டம்** - சு.கோசலா (முருகானந்தா உ.நி.பள்ளி), தி.சுகாயினி (முருகானந்தா உ.நி.பள்ளி), தி.யாழினி (பரந்தன் இந்து உ.நி.பள்ளி).

**பூநகரிக் கோட்டம்** - கு.நிரோயா (முழங்காவில் உ.நி.பள்ளி),த.அமைதிவண்ணன் (ஜெயபுரம் அ.த.க.பள்ளி), பூ.பாலராயி (முழங்காவில் உ.நி.பள்ளி), ப.சிறிவனசா (கறுக்காய்தீவு உ.நி.பள்ளி), நா.நிசாந்தி (முழங்காவில் உ.நி.பள்ளி).

**பளைக்கோட்டம்** - செ.யீவதாசு (பளை றோ.க.த.பள்ளி).

**பிரிவு 'இ'**

**கரைச்சிக் கோட்டம்** - இ.அயித்தா (திருவையாறு உ.நி.பள்ளி), தி. சுபாங்கி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ஞா.சுடர்விழி (திருவையாறு உ.நி.பள்ளி), செ.சயந்தினி (இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பள்ளி).

**பளைக் கோட்டம்** - அ.ரேணுகா(பளை மத்திய கல்லூரி),சி.நிரோஜினி(பளை றோ.க.த.க.ப), வே.யோவேல் (பளை றோ.க.த.க.ப.)

**பூநகரிக் கோட்டம்** - கு.டினேக்கா (பூநகரி உ.நி. பள்ளி), மு.சுலோயினி(நாச்சிக்குடா அ.த.க.).

**கண்டாவளைக் கோட்டம்** - ப.விசயசாந்தினி(பிரமந்தனாறு உ.நி.பள்ளி) இ.மகிந்தினி(தருமபுரம் உ.நி.பள்ளி), மு.சிறிசஞ்சலா (பிரமந்தனாறு உ.நி.பள்ளி), ச.ஐசுவரியா (முருகானந்தா உ.நி.பள்ளி).

**பிரிவு 'ஈ'**

**கரைச்சிக் கோட்டம்** - பா.சுகன்யா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), ர.வைஷ்ணவி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), நா.சுடர்வண்ணன் (திருவையாறு உ.நி.பள்ளி), இ.சோபிதா (கிளிநொச்சி உ.நி. பள்ளி)

**கண்டாவளைக் கோட்டம்** - சி.சங்கீதா (பிரமந்தனாறு உ.நி. பள்ளி), த.சாத்வீகா ( முருகானந்தா உ.நி. பள்ளி), தெ.இந்துயா (முருகானந்தா உ.நி. பள்ளி).

**பூநகரிக் கோட்டம்** - சி.மலறீசா (ஜெயபுரம் அ.த.க.பள்ளி), ரா.பானுமதி (ஜெயபுரம் அ.த.க. பள்ளி), மு.பிரியந்தினி(நாச்சிக்குடா அ.த.க. பள்ளி).

**பளைக்கோட்டம்** - ஈ.அனிச்ரியா (பளை றோ.க.த.க. பள்ளி), வே.டொர்சனா(பளை றோ.க.த.க. பள்ளி), கே.தமிழினி(பளை றோ.க.த.க. பள்ளி).

**பிரிவு 'உ'**

**கரைச்சிக் கோட்டம்** - கி.சேயோன் (திருவையாறு உ.நி.பள்ளி), ந.சாமந்தி(திருவையாறு உ.நி.பள்ளி), ய.கரிசிகா(இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), மா.சுயீவன் (கிளிநொச்சி உ.நி.பள்ளி)

**பளைக் கோட்டம்** - த.கவிசாந் (பளை மத்திய கல்லூரி), வி.சாளினி(பளை மத்திய கல்லூரி), ச.கோமளகௌரி(பளை மத்திய கல்லூரி).

**பூநகரிக் கோட்டம்** - மு.விதுசன்(ஜெயபுரம் அ.த.க.பள்ளி),சிறிநிதர்சன் (ஜெயபுரம் அ.த.க.பள்ளி), மு.கிதுசன்(ஜெயபுரம் அ.த.க.பள்ளி).

**கண்டாவளைக் கோட்டம்** - இ.ரியன்சியா (தருமபுரம் உ.நி.பள்ளி), ச.விதுலா(பிரமந்தனாறு உ.நி.பள்ளி), சி.கீதான்சலி(முருகானந்தா உ.நி.பள்ளி), இ.உசாந்தன்(முருகானந்தா உ.நி.பள்ளி), வி.சயானா(முருகானந்தா உ.நி.பள்ளி). (203)

## முல்லைத்தீவில் நடந்த 200ஆம் நாள் அஞ்சலி

### சமயப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன

புதுக்குடியிருப்பு,ஜூலை30

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 200 ஆவதுநாளை ஒட்டிய நிகழ்வுகள் அண்மையில் முல்லைத்தீவு றோ.க.வித்தியாலயத்தில் நடைபெற்றன.

அனர்த்தத்தில் இறந்த பாடசாலை மாணவர்களினதும் பொதுமக்களினதும் ஆத்ம சாந்தி வேண்டி சமயப் பிரார்த்தனைகளும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வித்தியாலய அதிபர் அருட்சகோதரி கில்டா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அரியரத்தினம், முல்லைத்தீவு பங்குத்தந்தை, ஊற்றங்கரை ஆலய பிரதமகுரு ஜெயந்திக் குருக்கள் ஆகியோர் ஏற்றினர்.

இறந்த மாணவர்களிற்கான சுடரினை அவர்களின் உறவினர் ஏற்றினர்.

நினைவு உரைகளை வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியை சூரியகலா ஆகியோர் நிகழ்த்தினர்.

சமயப் பிரார்த்தனைகளை முல்லைத்தீவுப் பங்குத்தந்தை மற்றும் ஜெயந்திக் குருக்கள்ஆகியோர் நிகழ்த்தினர். (3-353-202)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

புளியங்குளம்,ஜூலை30

மல்லாவி நகர்ப்பகுதி மற்றும் புறநகர் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

எனவே இதனை கவனத்திலெடுத்து சம்பந்தப்பட்டவர்கள் கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-355)

# நாவற்குழிப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு

கைதடி,ஜூலை30

நாவற்குழிப் பிரதேசத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு மிகத்தீவிரமாக நடை பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நாவற்குழி இறால் பதனிடும் தொழிற் சாலைக்கு மேற்குப் பக்கமாகவுள்ள காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு காலம் நேரம் பாராது நடைபெறுவதா[illegible]படுகின்றது.

அரியாலைப் பக்கமாக இருந்து லான்ட் மாஸ்ரரில் வரும் குழுவினர் மண் அகழ்வதில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இத்திருட்டு நடவடிக்கையை தடுத்து நிறுத்தச் செல்லும் பொதுமக்கள் மணல் திருடுவோரால் வாள்,பொல்லுகள் கொண்டு அச்சுறுத்தப்படுகின்றனர். தற்போது அப்பகுதி மணல் அகழப்பட்டதனால் பள்ளமாகி மழைகாலங்களில் வெள்ளம் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சமூக நலனில் அக்கறை கொண்டோர் இவ்விடயத்தில் கவனமெடுத்து உடனடியாக இம்மணல் அகழ்வைத் தடுத்துநிறுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-75)

**வெளிவந்துவிட்டது**

S.L.A.S. கான கட்டுரையும் சுருக்கமும் (கிரகித்தல்)

தொகுப்பு: T.திருமுருகன்

கிடைக்குமிடங்கள் (38323) (24.42.14.15)

| | |
|---|---|
| தீகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில். | D.C.S. ஆரியகுளம் சந்தி, (ரியூட்டன்) யாழ்.நகர். |

பொது அறிவு - பொது விவேகம் விரைவில் வெளிவரும்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**G.A.Q., B.A.I**
மற்றும்
**Spoken English**
ஆரம்பம்: 30-07-2005
காலை 11.30 மணி

ஆசிரியர்: **A.BRITTO**

Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road
(near commercial Bank),
Jaffna.
(38338) (24.14.15.42)

**சாரதி தேவை**

லொறி (லேடன் BMC) வாகனம் ஓட்டக் கூடிய சாரதிகள் தேவை. (அனுபமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு:
T.P.: 077 3086935
கணேசலிங்கம் (வெல்டிங் வேக் சொப்)
G.P.S. வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(38338) (24.14.15.42)

# அனுமதியற்ற கட்டடங்கள் குறித்து வலி.தென்மேற்கில் நடவடிக்கை

வலிதென்மேற்கு,ஜூலை30

வலி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் முன் அனுமதி பெறாது கட்டப்படும் கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சண்டிலிப்பாயிலுள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் பிரதேச ஒழுங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பண்டத்தரிப்பு பட்டினப் பகுதி உட்பட இப்பிரதேசத்தில் பிரதேச சபையின் முன் அனுமதி பெறாமல் கட்டடங்களும், மதில்களும் அமைக்கப்பட்டு வருவதாகவும் -

இதனையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும்- வேண்டுகோள் விடுத்தனர்.

இக்கூட்டத்திற்குச் சமுகமளித்த வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் இது விடயமாக தாம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இதேவேளை- பண்டத்தரிப்பிலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் சிலவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படும் உபத்திரவங்கள் பற்றியும் இப் பிரதேச செயலக ஒழுங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டு மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. சட்டவிரோதமான முறையில் இங்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமிடத்து அதனை கண்காணிப்பதற்காக கண்காணிப்புக் குழுவொன்றை அமைப்பதற்கு பண்டத்தரிப்பு கிராம அலுவலருக்கு தாம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார். (ஓ-135)

**காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு.

**மேலதிக விவரங்களுக்கு:**
திருமதி வ.ச.கதிர்காமர், தொலைபேசி இல. 0112696295. உடன் தொடர்புகொள்ளவும். தரகர் தேவையில்லை. (38302) (25-14-15-42)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

வடமராட்சி, ஜூலை30

பருத்தித்துறை கல்லூரி வீதியிலிருந்து சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையப் பகுதி ஊடாக வியாபாரி மூலைக்குச் செல்லும் வீதி மோசமாகப் பழுதடைந்துள் ளது. இவ்வீதியைச் சீராக்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர். இன்பருட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடற்கரை வீதி ஊடாகப் பருத்தித்துறை நகரத்துக்கு முன்னர் சென்றுவந்தனர்.

கடந்த 1997ஆம் ஆண்டுமுதல் பருத்தித்துறை கடற்கரை வீதி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் வந்தமையால் அவ்வீதிக்குப் பதிலாகக்கல்லூரி வீதி வியாபாரிமூலை வீதியை சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற சிறிய வானங்களில் செல்லப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதி பழுதடைந்து நீண்ட காலமாகத் திருத்தப்படாமையினால் இவ்வீதி ஊடாகக் குறிப்பிட்ட வாகனங்களைச் செலுத்துவதில் சாரதிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.(ஓ-173)

Jayoda **ஜயோதா** ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7119876 முதல் 7132711 வரை சீட்டிழுப்பு இல. 154 திகதி 28-7-2005

வெற்றி எண்கள் **0 8 6 5 0 5** சுப்பர் எண் **01**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,05,37,125/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,05,37,125/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,107 | 500/- | 5,53,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,110 | 50/- | 5,55,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 110,055 | 10/- | 11,00,550/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 1,000/- | 1,05,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,119 | 100/- | 1,11,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,002 | 20/- | 2,20,040/- |
| | | மொத்தம் | 58,16,490/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 64,19,090/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,08,45,925/-**

தொடர் இல. 6187721 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 01 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 7125552-1-75 |
| கண்டி | 7120283-9-41 |
| பதுளை | 7122203-6-43 |
| கேகாலை | 7128187-2-01 |
| மாத்தறை | 7120714-5-52 |
| கொழும்பு | 7130963-4-48 |
| மொனராகலை | 7126526-3-76 |
| அனுராதபுரம | 7128280-0-96 |

**1வது பிறந்தநாள் வாழ்த்து**

யாழ்ப்பாணம் நாவலர் வீதியை சேர்ந்த
கிருஸ்ணமோகன் நிகிலா தம்பதிகளின்

செல்வப்புதல்வி **திரிஷாஜினி**
தனது 1வது பிறந்தநாளை 30.07.2005 இன்று
தமது இல்லத்தில் வெகுவிமரிசையாக
கொண்டாடுகின்றார் இவரை அன்பு அப்பா,அம்மா
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார் சித்திமார்
மாமாமார், அத்தைமார் அண்ணமார், அக்காமார்
மச்சான்மார் மற்றும்
உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்
திரிஷாஜினியை பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம்
யாழ் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருள் பெற்று
வாழ்கவென வாழ்த்துகின்றனர்



இங்ஙனம்
அப்பா
கிருஸ்ணமோகன்

இதோ அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**aat (SriLanka)**

Foundation Level, Intermediate Level & Final
Exam: Jun 2006
Minimum Requirement:- GCE O/L 5 Passes or
GCE A/L 2 Passes
Medium: English & Tamil
வார நாள் வகுப்புகள், வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

Further Details:
**Director,**
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road
(Near Commercial Bank),
Jaffna. T.P.: 021 222 3382. (சி-44115) (42-14.15)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**EXTERNAL DEGREE**
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.

ஆரம்பம்: 30.07.2005 - 9.30 a.m.
**** GAQ 2004 பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் சலுகை அடிப்படையில் பரீட்சை ஆரம்பமாகும்வரை இடம்பெறும்.

Further Details:
**Director,**
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road
(Near Commercial Bank),
Jaffna. (சி-44115) (42-14.15)

பாடசாலை அதிபர்களே!
மாணவ மணிகளே!
நாடுங்கள்.....

- பாடசாலை, பல்கலைக்கழகப் பாடப் புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- தர உள்ளீட்டுப் பொருள்கள், மூலதனப் பொருள்கள்
- வாத்தியக் கருவிகள்
- அழிபொருள்கள்
- நுணுக்குக் காட்டிகள்
- கணனி நூல்கள்
- விளையாட்டுப் பொருள்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள்
- **O.H.P** புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்

யாவற்றையும் நீங்கள்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்**
**117, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.**
(C/44349) T.P.: 021 222 2938 (14-14-42)










தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் தேசிய கலை இலக்கியப் பெருவிழா கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# மோ.சைக்கிள் விபத்துக்களில் ஒருவர் பலி; இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

இரு வேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற இரண்டு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

கோப்பாய் இராசவீதிப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் இருபாலையைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவருமான செல்லத்துரை எழில்மதி (வயது 24) என்பவர் படுகாயமடைந்தார். இவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலணைப் பாலப்பகுதியில் மோட்டார்ச் சைக்கிள் சறுக்கி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் சென்றவர்களில் நாரந்தனையைச் சேர்ந்த தேவதாஸ் அமிர்தபாலன் (வயது 25) என்பவர் உயிரிழந்தார். அவருடன் சென்ற யோசேப் நிரோஜன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்தார்.

இவர்கள் .இருவரும் படுகாயமடைந்து ஆபத்தானநிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் அமிர்தபாலன் என்பவர் மரணமானார்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவத்தை அறிந்த பொலீஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து வேலணை வைத்தியசாலை அம்புலன்ஸை வரவழைத்து அதன் மூலமே இருவரையும் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-15-ரி)

## வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி அறிவித்தல்

சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பு, (IOM) தனது திட்ட செயற்பாடுகளுக்காக வாடகைக்கு பின்வரும் வகை வாகனங்களை வைத்திருப்போரிடம் இருந்து கேள்விகளைக் கோருகின்றது.

1. ரொயாற்றோ ரவுண் ஏஸ் குளிரூட்டப்பட்ட வாகனம்
சாரதியுடன் அல்லது சாரதியில்லாமல் - மாதாந்தம் அல்லது 04 மாதம்
2. ஹைஏஸ் குளிரூட்டப்பட்ட வாகனம்
சாரதியுடன் - மாதாந்த வாடகைக்கு
3. ஹைஏஸ் குளிரூட்டப்பட்ட வாகனம்
சாரதியுடன் - நாளாந்த வாடகைக்கு
4. பிக்கப் குளிரூட்டப்பட்ட வாகனம்
சாரதியுடன் அல்லது சாரதியில்லாமல் - மாதாந்தம் அல்லது 4 மாதம்

மேற்படி வாகனங்களை வாடகைக்குவிட விரும்புவோர் மேலே குறிப்பிட்டதன்படி கேள்வி விவரங்களை மூடிய கவரியில் வைத்து திட்ட ப்பொறுப்பதிகாரி, சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பு, (IOM) இல.70, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 03.08.2005 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

(38344) (38-11-45)

திட்டப்பொறுப்பதிகாரி,
சர்வதேச புலம்பெயர்தலுக்கான நிறுவனம், (IOM) யாழ்ப்பாணம்.

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யா/கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை (31.07.2005) ஞாயிறு பி.ப. 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பாடசாலையின் அனைத்துப் பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதிபர்
(38355) (38-11-45) யா/கைதடி குருசாமி வித்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திருமதி கலைமதி மணிவண்ணன் அவர்களின் அன்புத் தந்தை (38350) (38-11-45)

### மார்க்கண்டு பரமசாமி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒன்றியம்,
வலி.தெற்கு , உடுவில், பிரதேச செயலகம்.

## மரண அறிவித்தல்

### சுப்பர் பூபாலபிள்ளை

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பி.எஸ்.பி. கல்விநிலைய வீதி, மகாறம்பைக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் பூபாலபிள்ளை நேற்று (29.07.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற செல்லமாணிக்கம் - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் தவநாயகலோகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் கோகுணேஸ்வரி , சற்குணேஸ்வரி, குலேந்திரன் (சுவிற்சர்லாந்து), குபேந்திரன் (அபுதாபி), சிவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவநாதன், விஜிதா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் மாமனாரும் விதுசனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.
*வவுனியா.* (சி-44130) (38-11-45)

## விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### அறிவித்தல்

விஞ்ஞானபீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் *08.08.2005* ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

(சி-44128) (38-11-45) -பதிவாளர்.

## SLAS

### வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
வழங்குபவர்: க.கனகறட்ணம்
உதவி மாவட்ட செயலர்,
ஆளணி.
காலம்: இன்று *(30.07.2005)* சனி
காலை *9.30* மணி
நாளை *(31.07.2005)* ஞாயிறு *9* மணி
(38349) (38-11-45)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த
பிரியசகி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(C/41361)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ்
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே). (ரீல்ஸ்)
(C/41380)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாதன்ஸ் சினிமா [illegible] யாழ்ப்பாணம்.
[illegible]

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின [illegible] சினேகா, கிரண், வடிவேல் நடித்த
சின்னா
[illegible]
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

தமிழ் வளர்த்தோர் முன்னே செல்ல தமிழன்னை வீதிவலம்



## மரண அறிவித்தல்கள்

### திருமதி அல்பிறெட் அம்மா லாசறஸ்

(முன்னாள் ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அல்பிறெட் அம்மா லாசறஸ் நேற்று (29.07.2005) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் லாசறஸ்சின் அன்பு மனைவியும் Dr.ஊதிகா, சந்திரிகா (லண்டன்), தேவிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.விக்கினேஸ்வரன், ரவி (லண்டன்), சேகர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற லூர்த்தம்மா, காலஞ்சென்ற பொன்றோஸ், புஸ்பம், மக்டலீன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ம.அந்தோனிப்பிள்ளையின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு பொரளை ஜெயவர்த்தனபுர மலர்சாலையில் வைக்கப்பட்டு, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்டலீன் பிரகாசராசா
(சகோதரி).

*174/11A, கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
T.P.: 0112 524155 (38351) (38-11-45)

### சின்னத்தம்பி - அருச்சுணன்



மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், புங்குடுதீவினை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட.சின்னத்தம்பி அருச்சுணன் நேற்று (29.07.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணி, புஸ்பமலர், நவரட்ணம், தவான் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (ஜேர்மனி), ஜெந்தினி (கனடா), ஜெயபாலினி (ஜேர்மனி), ஜெயகௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு தந்தையும் யோகநாதன், காலஞ்சென்ற மருதலிங்கம், குமுதினி, ஜெயராஜ் (ஜேர்மனி), விஷ்ணுதாசன் (கனடா), நாகேந்திரன்(ஜேர்மனி), சிவகுருநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.07.2005) சனிக்கிழமை இல. 75, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4 மணிக்கு கொட்டடி சேமக்காலை (தொலைத்தொடர்பு பரிவர்த்தன நிலையம் அருகில்) யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
போ.பகீரதன்
(பேரன்).
*யாழ்ப்பாணம்.* (38353) (38-11-45)

### செல்லப்பா பூபாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பூபாலசிங்கம் வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம் - பறுவதம் தம்பதியரின் அருமை மருமகனும், சிவமணியின் அன்புக் கணவரும், சந்தாதேவி, அம்பிகாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும், நவரத்தினம், இலங்கநாதன், கதிரவேலு, காலஞ்சென்ற ஜெயலட்சுமி, சிவபாலன், சரோஜினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவமனை'*
*அழகொல்லை,*
*அளவெட்டி.*
(சி-44130) (38-11-45)
*தகவல்:*
மனைவி.

# 2 விடயங்களில் அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 8 ஆம் திகதி ஒஸ்லோ திரும்பும் வழியில் லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன்பாலசிங்கத்தையும் அவர் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது.

இதற்கிடையில்-

நோர்வேத் தரப்பின் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசுத் தலைமை இரண்டு முக்கிய விடயங்களில் அதிருப்தி கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

உலகில் உள்ள கன்சர் வேட்டிவ் (வலது சாரி) கட்சிகள் அனைத்தும் பங்குபற்றும் சர்வதேச ஜனநாயகச் சங்கத்தின் வருடாந்த மாநாடு அண்மையில் வாஷிங்ரனில் நடைபெற்றது. இலங்கையில் இருந்து ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதில் பங்குபற்றினார் என்பதும், சங்கத்தின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டார் என்பதும் தெரிந்தவையே.

இந்தக் கூட்டத்தில் வைத்து சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட்டிடம் இருந்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் ஏற்றுக்கொண்டார்.

அந்த மாநாட்டின் பொது அமர்வில் வைத்து இலங்கையில் இந்த வருடமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதுவே இலங்கை அரசுத் தலைமையைச் சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் முக்கிய தலைவராகக் கலந்துகொள்ளும் ஒரு மாநாட்டில் இப்படி இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் தலையிடும் தீர்மானம் நிறைவேற்றப்படுவது விசனத்துக்குரியது என்ற இலங்கையின் அதிருப்தியை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஏற்கனவே நோர்வேக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் இலங்கை வரும்போது அவரிடமும் இதுகுறித்து ஜனாதிபதியே அதிருப்தி தெரிவிப்பார் எனத் தெரிகிறது.

அதேசமயம், இலங்கை விவகாரம் தொடர்பாக இணைத் தலைமை நாடுகள் அண்மையில் வெளியிட்ட அறிக்கையும் இலங்கை அரசுத் தலைமையை எரிச்சலுக்குள் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைமை நாடான பிரிட்டன் ஆகிய நான்கு இணைத் தலைமை நாடுகளும் சேர்ந்து வெளியிட்ட இந்த அறிக்கையில் இலங்கையின் தமிழர் தாயகத்தில் இயங்கும் துணைப்படைகள் மற்றும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அதன் மூலம் வன்முறைகள் இடம் பெறுவதைத் தவிர்க்கும்படி கோரப்பட்டிருந்தது.

அதுவும் அரசை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த விடயம் குறித்தும் நான்கு நாடுகளினதும் தூதுவர்களையும் ஜனாதிபதி குமாரதுங்க நேரடியாக அழைத்துத் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தார் என்பதும் தெரிந்ததே.

சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் இருந்த தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களை இலங்கை அரசு களைந்து அக்குழுக்களையும் துணைப் படையையும் அகற்றியுள்ளது என்றும் -

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழான இந்தக் கடப்பாட்டை இலங்கை அரசு நிறைவு செய்துள்ளது என்பது அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினருக்கு நன்கு தெரிந்திருந்தும் இப்படி ஓர் அறிக்கையில் அவர்களும் கையொப்பமிட்டிருப்பது அதிர்ச்சிக்குரியது என்றும் -

இலங்கை அரசு கருதுகின்றது. எனவே, இதுபற்றிய அரசின் அதிருப்தியும் ஜனாதிபதியால் விடர் ஹெல்கிஸனுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே, விடர் ஹெல்கிஸன் ஒரு தடவை கொழும்பு வந்திருந்தபோது மரியாதை நிமித்தம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார். அப்போது விடர் ஹெல்கிஸன் தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சார்பாகச் செயற்படுகின்றார்கள் என்ற சாரப்பட நேரடியாகவே - அதேசமயம் கிண்டலுடன் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சித் தரப்பின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் விடர் ஹெல்கிஸன் கொழும்பு வருவதால் இந்த விஜயம் முக்கியமானது என்றும் -

எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் - சாத்தியங்கள் - ஏதும் உண்டா என்ற புறநிலையை நோர்வேத் தரப்பு அறிய இவ்விஜயம் நன்கு உதவும் என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க)

# நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. இலங்கையில் போர்நிறுத்த உடன்படிக்கையை எதிர்கொள்வதில் உள்ள இடர்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தாம் விலாவாரியாக எடுத்துக் கூறினார் என இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று ஒஸ்லோவிலிருந்து தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடி நிலைமையை சுமுகமாக்கி இயல்புநிலையை மேம்படுத்தும் வகையில் அனுசரணையாளர்கள் மட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவித்த ஹொக்லண்ட், இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் சுமுகத் தீர்வு காணப்படுமென்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, கண்காணிப்புக்குழுவின் தலைவர் நாளை கொழும்பு திரும்பவுள்ளார். (எ-க)

# அச்சுவேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருங்காலி நீர்ப்பாம்புபுலம் எனும் இடத்தில் வைத்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுடப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரின் தலையிலும், நெஞ்சிலும் மூன்றுக்கும் கூடுதலான சூட்டுக் காயங்கள் உள்ளன எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலீஸார் இக்கொலை குறித்து விசாரித்து வருகின்றனர். (எ-11)

# பொதுக்கட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பு எவரினதும் அடிப்படை உரிமையையும் மீறவில்லை. உண்மை நிலையை மறைத்து, தவறான தகவல்களை முன்வைத்து, மனுதாரர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றிருக்கின்றனர்.

2002 பெப்ரவரி 22ஆம்திகதி அரசும், புலிகள் இயக்கமும் போர்நிறுத்த ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டதையடுத்து, புலிகள் மீதானதடை நீக்கப்பட்டுவிட்டது. 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் புலிகள் இயக்கத்துடன் பலமுறை சமாதானப் பேச்சுகளை அரசு நடத்தியது.

இவ்வாறான சூழ்நிலையில் ஆழிப்பேரலையினால் வடக்கு - கிழக்குப் பகுதி பெரும் பாதிப்புக்குள்ளானதையடுத்து, அங்கு நிவாரண, மீள்கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் திறைசேரி ஆகியன ஊடாக இதற்கான நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்ள ஏற்பாடானது. சட்டப்படி இது மேற்கொள்ளப்பட்டதால் இதில் எந்தத்தவறும் இல்லை. இவ்வாறான ஒப்பந்தமொன்றில் அரச அதிகாரி ஒருவரைக் கைச்சாத்திடச் சொல்வதற்கு ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உண்டு.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான மனுதாரர்களின் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது. அது அரசின் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக உள்ளதுடன், நிவாரணப் பணிகளுக்கான நிதியைச் சர்வதேசத்திடமிருந்து புலிகள் நேரடியாகக் கோரும் நிலைமையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு எதிர் மனுக்களை நிராகரிக்கவேண்டும்.

- இவ்வாறு அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

# கண்காணிப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட அமைப்பாளர் மதனராஜா, படுகொலைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் அமைந்துள்ள கோவில்வீதி பலமணிநேரம் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும், கலகம் அடக்கும் பொலீஸாரும் குவிக்கப்பட்டு, அப்பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டவர்கள் ஒரு கட்டத்தில் சவப்பெட்டியைக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாக வைத்துவிட்டுக் கலைந்து சென்று அருகில் உள்ள ஆலய முன்றிலில் கூடியிருந்தனர்.

தமக்கு ஒரு தீர்வைக் கண்காணிப்புக்குழு பெற்றுத்தரும் வரை சவப்பெட்டியை அங்கிருந்து அகற்றப் போவதில்லை என அங்கு கூடியிருந்தோர் தெரிவித்தனர்.

இதற்கிடையில் - நேற்று முன்னிரவு வரை கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் முன் பாக, சவப்பெட்டி கிடக்கக் காணப்பட்டது. எனினும், அப்பகுதியில் நிலவிய அசாதாரண நிலைமை இது விடயத்தில் மேலதிக செய்தி களைப் பெற இயலாமற் போயிற்று. (எ-7)

# தமிழீழத் தேசியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பைத் தெளிவாகப் பார்வையிடமுடியும்.

செய்மதி மூலமாகவே இந்தத் தொலைக்காட்சி சேவை ஒளி பரப்பாவதால் டிஸ் அன்ரனா (**Dish Antena**) பொருத்துவதன் மூலம் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி சேவையை இலங்கையிலும் பார்க்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொலைக்காட்சி சேவை விஸ்தரிப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை 10.30 மணியளவில் கு.வீரா தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளர் சி.கருணாகரன், விடுதலைப் புலிகளின் ஊடகப் பொறுப்பாளர் நரேஷ் மாஸ்ரர், ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது தேசிய தொலைக்காட்சி சேவைப் பணிப்பாளர் சி.கருணாகரன் தெரிவித்ததாவது:-

1987 ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி தொடங்கப்பட்ட தமிழீழத் தொலைக்காட்சி சேவை பின்னர் ஏற்பட்ட தீவிர யுத்த நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பின்பு இப்போது மீண்டும் ஐரோப்பிய, தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. முதலில் ஒரு மாத காலத்துக்குப் பரீட்சார்த்தமாக ஒவ்வொரு நாளும் இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிமுதல் 9.30 மணி வரை இந்த ஒளிபரப்பு இடம்பெறும். இதன் பின்னர், அது நிரந்தரமாக்கப்பட்டு சேவை நேரம் இரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை விஸ்தரிக்கப்படும் - என்றார். ஏற்கனவே, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் இந்தச் சேவையைப் பார்க்கக் கூடிய தாக உள்ளது. (ஐ-8)

# கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இதேவேளை, இப்படிக் கட்சியின் யாப்பைத் திடீரென மாற்றும் நடவடிக்கை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் அதிருப்தி தெரிவித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது. (எ-க)


NEW SCIENCE CENTRE
யாழ் நகர்.
DAY CLASS CHEMISTRY
- அலகு ரீதியான மீட்டல்
- அலகு ரீதியான வினாவிடை
- அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
- 5 MODEL EXAM
- 20 இற்கு மேற்பட்ட கருத்தரங்கு
- திங்கள் முதல் வெள்ளிவரை 10-11.30

By: அன்பழகன் B.Sc.
(38291) (11-45 -38)

IIS CITY CAMPUS
HND
புதிய பிரிவு ஆரம்பம்
17.08.2005
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
# 181, Navalar Road,Jaffna
T.P. No : 021 222 8060
(சி-44247) (11-45 -38)

IIS
COMPUTER COURSES
ஆரம்பமாகியுள்ள புதிய பிரிவுகளுக்கு IIS நிறுவனம் தனது 10வது வெற்றியாண்டுச் சிறப்பு கட்டணச் சலுகைகளை வழங்கிவருகிறது. இச்சலுகை 31.07.2005 வரை மட்டுமே என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
Director
IIS, # 100 Clock Tower Road,
Jaffna.
(சி-44378) (11-45 -38)

தேவை
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- கணக்காளர்
உதவியாளர்
கணனி அறிவுடையோர் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P.: 021 222 2884
(சி-44387)

SKY COMPUTERS (PVT) LTD.
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
On Line Courses
- MS Office XP
- Desk Top Publishing
Only 2000/= 3 Months
Affiliated with Irish International University (U.K)
மற்றைய நிறுவனங்களை விட,
முற்றிலும் வேறுபட்ட பயிற்சி முறை
இலகுவான கட்டணமுறை,
தரமான ஆசிரியர்கள்.
Unlimited Practical Hours
E – mail : skycom@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead


# மரண அறிவித்தல்கள்

## விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது இல.18, பிரம்படி ஒழுங்கை கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் அவர்கள் நேற்று (29.07.2005) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

18, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு.
(38357) (11-45 -38)

## சின்னையா வயிரமுத்து

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் சிறுப்பிட்டி பப்பன் கடை வீதியை தற்காலிக வசிப்பிடமாவும் கொண்ட சின்னையா வயிரமுத்து 29.07.2005 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.07.2005) சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வ.ரவிச்சந்திரன்
(மகன்).

பப்பன் கடை வீதி,
சிறுப்பிட்டி.
(38356) (11-45 -38)


தேவை
- ஓட்டோ ஓட்டுநர்(சாரதி அனுமதிப் பத்திரத்துடன்,
- பெயின்ரர் (பழக விரும்புபவர்களும் தேவை)
- தச்சுவேலை தெரிந்தவர்களும்,வெல்டிங்வேலை தெரிந்தவர்களும்,பழகுபவர்களும் தேவைப்படுகின்றனர்.

நேரில்வரவும்.
ஏசியன் தளபாட நிலையம்
இல.133,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0777 536108
(C/44359)

324, Palaly Road, Jaffna.
BIT

வீஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
1st Semester
New Batches Commence on
Weekend: 30th July at 09.00 a.m.
Weekday: 01st August at 04.45 p.m.
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by UNDP/JRRP


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.